ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය්

27.03.2013 - மலர் 10, இதழ் 04



## ஜேர்மனியின் ஒருநாள் ஜனாதிபதி

கணினி கையேடு இணைப்பு



## இன்னிசை தரும் நரம்புக் கருவிகள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 'மாமன்னன் பண்டாரவன்னியன்'



06

அரியாலையூர் சி.சிவதாசன்

## தூக்குமரத்தடி



பண்டாரவன்னியனின் பெருந்தாக்குதலை யாழ்ப்பாணத்தில் இருந்த ஆங்கிலேய நிர்வாகம் கொழும்புத் தலைமையகத்துக்கு அறிவித்தது. இதனால், கொழும்பு ஆங்கில நிர்வாகம் கொதித்தெழுந்தது. பண்டாரவன்னியனை எப்படியாவது வன்னி மண்ணிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்று முடிவெடுத்தது. அவன் இருக்கும்வரை வன்னி மண்ணில் உள்ள சாயவேர்கள், யானைத் தந்தங்களைப் பெறமுடியாது என்பதை ஆங்கிலேய நிர்வாகம் நன்குணர்ந்தது.

இக்காலகட்டத்தில் கொழும்பில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த கவர்னர் நோத் யாழ்ப்பாண ஆங்கில நிர்வாகத்தை மிகக் கடுமையாக எச்சரித்தார். வன்னியர்களை அடக்கினால்தான் யாழ்ப்பாண மாவட்டத்தை சுமுகமாக ஆட்சிக்குட்படுத்தலாம் என்பதை தெளிவாக யாழ்ப்பாண நிர்வாகத்தின் கவனத்திற்கு எடுத்துரைத்தார். இதேவேளை, கெப்டன் வொன்றிபேக் முல்லைத்தீவில் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை எண்ணி வேதனைப்பட்டான். எப்படியாவது முல்லைத்தீவைப் பிடித்து பண்டாரவன்னியனைச் சிறைப்பிடிக்க வேண்டும் என அவன் முடிவு கட்டினான். ஆனால், கவர்னர் நோத் வேறு விதமாகத் திட்டம் தீட்டியிருந்தார்.

ஆனால், பண்டாரவன்னியனோ, வன்னிப் பிராந்தியத்தின் எல்லைகளில் தன் படைப்பிரிவுகளை நிறுத்தி பாதுகாப்பைப் பலப்படுத்தி இருந்தான். அஞ்சாநெஞ்சும், எதிரிகளைத் துணிச்சலுடன் எதிர்கொண்டு வெல்லும் திறன் கொண்ட பண்டாரவன்னியனின் போர்த் திறமையை கவர்னர் நோத் நன்கறிந்திருந்தார். அதனால், முல்லைத்தீவுக் கோட்டையை மீளவும் கைப்பற்ற திருகோணமலையிலிருந்து கெப்டன் எட்வர்ட் மெச்சின் தலைமையில் ஒரு படைப்பிரிவை அனுப்பினார். அப்படைப்பிரிவு மிகுந்த சிரமத்தின் மத்தியில் முல்லைத் தீவைக் கைப்பற்றியது. அப்பொழுது முல்லைத்தீவுக்குப் பொறுப்பாக இருந்த குமாரசேகர முதலியாரும் வேறு சிலரும் சிறைப் பிடிக்கப்பட்டனர். அவர்கள் ராஜத்துரோகம் இழைத்தவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள். அவர்கள் தூக்கிலிடப்பட்ட இடம் இன்றும் 'தூக்குமரத்தடி' என்று அழைக்கப்படுகின்றது. இதனால், பண்டாரவன்னியன் தனது இராசதானியை பனங்காமத்திலிருந்து மூள்ளியவளை, ஒட்டுசுட்டான் பகுதிகளுக்கு மாற்றிக்கொண்டான். அங்கிருந்தவாறே ஆங்கிலேயர்களின் நடவடிக்கைகளைக் கண்காணித்துக்கொண்டிருந்தான்.

இதேவேளை, மைத்துனன் குமாரசிங்க வன்னியன் தன் மகனை பண்டாரவன்னியனுக்கு உதவியாக அனுப்ப முடிவுசெய்து தன் மகன் புவியழகனை அழைத்து பண்டாரவன்னியனின் இராஜதானிக்குச் சென்று அவனுக்கு உதவவேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். இதற்கிசைந்த புவியழகனும் தன்னை யாரென்று காட்டிக்கொள்ளாமல் தன் கவியாற்றலை வெளிப்படுத்தி, தான் ஒரு புலவர் எனக் கூறி பண்டாரவன்னியனின் அரண்மனையில் இடம்பிடித்தான். அவனது கவியாற்றலைக் கண்டு பண்டாரவன்னியனும் அவன் அவையில் உள்ளோரும் அவனை அரண்மனைப் புலவனாக்கினர்.

(தொடரும்)

விஜய் Bookvin

இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்


நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ருபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.

**✱ $E=mc^2$ என்ற சமன்பாடு எதனைக் குறிக்கின்றது?**

*பி.யோகதர்ஷன், வட்டகொட*

நேரடியாகச் சொல்வதென்றால்,

E ⟶ Energy - சக்தி
m ⟶ mass - திணிவு
$C^2$ ⟶ Speed of light squared - ஒளி வேகத்தின் வர்க்கம்




அதாவது, மிகச்சிறிய அளவிலான திணிவிலிருந்து, பாரியளவிலான சக்தியை உருவாக்கலாம். ஆனால், திணிவு, சக்தி என்ற இரு விடயங்கள் முற்றிலும் வெவ்வேறானவை அல்ல; ஒன்றிலிருந்து ஒன்று பரிணமிக்கக்கூடியவை. அணுகுண்டின் அடிப்படை; சூரியன் எவ்வாறு அணையாமல் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கிறது?, ஒளியின் வேகத்தை எதனாலும் விஞ்ச முடியாமலிருப்பது போன்ற பல விடயங்களுக்கு இந்த சமன்பாடு விளக்கம் சொல்கிறது. அல்பர்ட் ஐன்ஸ்டைன் எனும் வியத்தகு விஞ்ஞானியால் கண்டறியப்ப்பட்ட உலகப் புகழ்வாய்ந்த சமன்பாடாக '$E=mc^2$' விளங்குகிறது.

✱✱✱✱

**✱ ஏனைய கடல்களைவிட 'சாக்கடல்' ஏன் அதிக உவர்தன்மையுடன் காணப்படுகின்றது?**

*எப்.எம்.எப்.சாஜிதா, மன்னார்*

பொதுவாக, ஆறுகளில் இல்லாத உவர்தன்மை கடலில் தெரியக் காரணம், ஆற்று நீரின் மூலம் அடித்துச் செல்லப்படும் தாதுக்கள் கடல் நீருடன் கலப்பதனால் ஆகும். இதனால்தான் கடல்நீர் உவர்தன்மையுடன் காணப்படுகின்றது. (இவ் உவர் தன்மைக்கு



மேலும் பல காரணிகளும் கூறப்படுகின்றன.) அதிலும், சாக்கடலின் அளவு சிறியது. கிட்டத்தட்ட 50 மைல் நீளமும், 11 மைல் அகலத்தையும் கொண்டது. அத்துடன், சாக்கடலுக்கு எவ்வித வடிகாலும் இல்லை. அதாவது, தான் கொண்டுள்ள நீரையும், அத்துடன் சேர்ந்த உப்புகளையும் வெளியேற்ற வாய்ப்பில்லை. நீர் ஆவியாகிச் செல்ல, செல்ல உப்புக்களின் செறிவும் அதிகரிக்கின்றது. இதுவே சாக்கடலின் அதீத உவர்தன்மைக்கு முக்கிய காரணமாகும். இதனாலேயே, உயிரினங்கள் வாழ முடியாத, இலகுவில் மிதக்கக்கூடிய கடலாக சாக்கடல் காணப்படுகின்றது.

**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
Vijey Desa
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

# உலகின் பழமையானதும் விசாலமானதுமான நூலகம்



ஒரு நாட்டின் பெரும் சொத்தாகவும் அளப்பரிய வளமாகவும் 'நூலகம்' கருதப்படுகின்றது. உலகம் முழுவதும் பிரபல்யம் பெற்ற பல நூலகங்கள் உள்ளன. இவற்றுள் மிகவும் பழமையானதும் விசாலமானதுமான நூலகமாக 'அலெக்சாண்ட்ரியா நூலகம்' கருதப்படுகின்றது. இது தவிர, இந்த நூலகம் மீண்டுமொரு தடவை வரலாற்றில் இடம்பிடிக்கக் காரணம், அந்த நூலகம் தீக்கிரையாக்கப்பட்டமையாகும். இந்த செயற்பாடு உலக வரலாற்றில் நிகழ்ந்த படுமோசமான அழிவு என்றும் கருதப்படுகின்றது.

## அலெக்சாண்ட்ரியாவின் பெருமை

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்தின் மிகப் பெரிய நகரமாக 'அலெக்சண்ட்ரியா' கருதப்பட்டது. எகிப்தின் மத்தியதரைக் கடல் கரையோரப்பகுதியில் 20 மைல் தூரம் வரை இந்நகரம் பரந்திருந்தது. இந்த நூலகம் கி.மு 361 இல் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த நூலகத்தின் நிர்மாணப் பணிக்கான அடித்தளத்தினை இட்டவர் அரிஸ்டோட்டலின் மாணவரான திமித்ரியஸ் என்பவராவார். இந்த நூலகமானது, தத்துவஞானி அரிஸ்டோட்டலின் லைசியம் எனும் பல்கலைக்கழகத்தின் மாதிரி வடிவத்திற்கு அமையவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நூலகத்தின் நிர்மாணம்

மியுசஸ் எனும் கிரேக்க தேவாலயத்தில் சேவையாற்றும் கல்விமான்களுக்கு அறிவினைப் புகட்டும் முகமாகவே, இந்த நூலகம் அமைக்கப்பட்டது.



அலெக்சாண்ட்ரியா நூலகம் (இன்று)



நவீன மயப்படுத்தப்பட்ட பின்னர்

பெபிரஸ் தாள்களிலேயே அக்கால கட்டத்தில் நூல்கள் எழுதப்பட்டன. இவ்வாறு பெபிரஸ் தாள்களில் எழுதப்பட்ட லட்சக்கணக்கிலான நூல்கள் சுருட்டப்பட்டு றாக்கைகளில் பேணி வைக்கப்பட்டன. 'பிபிலோதெக்காய்' என்றே அவை அழைக்கப்பட்டன.

அலெக்சாண்ட்ரியா நூலகத்தின் மற்றுமொரு விசேட அம்சம் என்னவெனில்; பூங்காக்கள், உணவகம், வாசிப்புக்கூடம், கேட்போர் கூடம், கலந்துரையாடும் கூடம் போன்ற பல வசதிகள் இந்த நூலகத்தில் அமைக்கப்பட்டிருந்தமையாகும். அத்துடன், நூலகத்தில் நூல்கள் வைக்கப்படும் றாக்கைகளில் 'இது ஆன்மாவை சுகப்படுத்தும் இடமாகும்' என்ற வாசகம் ஆங்காங்கே பொறிக்கப்பட்டிருந்தது.

## நூலகத்தின் சேவைகளும் வளங்களும்

அலெக்சாண்ட்ரியா நூலகத்திற்குத் தேவையான நூல்கள் அரசின் அனுசரணையுடனேயே பெறப்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட நூல்களின் மூலப்பிரதிகளை நூலகத்தில் வைத்துவிட்டு, அவை பிரதி எடுக்கப்பட்டு உலகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டன. இதனால், அந்தக் காலத்தில் சிறந்த நூல் வெளியீட்டாளர் என்ற பெருமையை அலெக்சாண்ட்ரியா நூலகம் பெற்றிருந்தது. பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பான லட்சக்கணக்கான நூல்கள் இந்த நூலகத்தில் இருந்தன. கணிதம், தர்க்கவியல், தத்துவவியல், [illegible] விஞ்ஞானம், ஜோதிடம், வானியல் சாஸ்திரம், ஓவியக்கலை, கட்டடக் கலை ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட நூல்களும் இவற்றுள் அடங்கும். நூல்களை எழுதவென தனியான ஆசிரியர் குழாம் ஒன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அவர்கள் 'நூலக பண்டிதர்கள்' என்று அழைக்கப்பட்டனர்.

## துரதிஷ்டவசமான நிகழ்வு

தீக்கிரையாக்கப்பட்டதால்தான் இந்த நூலகம் அழிக்கப்பட்டது. எனினும், இந்த விடயம் குறித்து நான்கு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஜுலியஸ் சீசரினால் இந் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது என்ற ஒரு கருத்தும் உள்ளது. தவிர, ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியின் பின்னர் பலம் பெற்ற கிறிஸ்தவ அணிகளால் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டதாகவும் அவுரேலியன் பேரரசினால் நூலகத்திற்கு தீ வைக்கப்பட்டதாகவும் பலம் பொருந்திய முஸ்லிம் ஆட்சியாளரான ஓமர் காலிப்பின் ஆணையின் பிரகாரம் நூலகத்திற்கு தீ மூட்டப்பட்டதாகவும் பலவித கருத்துக்கள் நிலவுகின்றன.



அன்று நூலகம் இருந்தநிலை

## புனர் நிர்மாணமும் நவீன மயப்படுத்தலும்

1974 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட யோசனைக்கமைய, 1995 ஆம் ஆண்டு நவீன அலெக்சாண்ட்ரியா நூலக நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி அது உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. தற்போதளவில் முன்பிருந்ததைவிட, பல்வேறு பிரிவுகளையும் நூல்களையும் இந்த நூலகம் தன்னகம் கொண்டுள்ளது. -பிரியதர்ஷினி



அலெக்சாண்ட்ரியா நூலகம் (அன்று)

வாசகர் முகம்

இந்த வாரம் இடம்பெற்றிருப்போர்:
பி.எஸ்.அப்துல்லாஹ்,
பி.எஸ்.அஹமட்,
துந்துவ.



DIPLOMA IN ENGLISH விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
கிலாஸ் போகாமலே ஆங்கிலம் படிக்கலாம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
@- 10 பாடத்தொகுதிகள் தமிழ் விளக்கத்துடன்
@- ஆங்கில பேச்சுப்பயிற்சி / உரையாடல் வீடியோ சீடி 3 மூன்று
@- Video CD வழிகாட்டி புத்தகம் ஒன்று.
@- அழகிய கைக்கடிகாரம் (Watch) ஒன்று./மாணவர் அடையாள அட்டை
@- Diploma in English சான்றிதழ். என்பன வழங்கப்படும்.
பெயர், முகவரியைக் குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறிக்கட்டணம். ரூபா 1600/- மாத்திரம் அறவிடப்படும். வேறு கட்டணம் இல்லை.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081-222 77 11 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....



09

பன்-பாலா

கதை கேட்பது போல சுவாரஷ்யமாகக் கேட்டுக்கொண்டிருந்தனர் சுதனும் பிரியனும்.

"எனக்குத் தாவரவியலில் ஈடுபாடு அதிகம் இருந்ததால், அதை உருவாக்குகின்ற பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். இங்குள்ள மரம் செடிகளை குள்ளமாக உருவாக்குவதன்மூலம் நான் குள்ளன் என்கிற மன உளைச்சலில் இருந்து விடுபட்டேன்'' இவ்வாறு கூறிவிட்டு அவர்களைப் பார்த்துச் சிரித்தார் விஞ்ஞானி இராமபுத்திரன்.

"உங்கள் ஆராய்ச்சிகள் எல்லாம் சரிதான். ஆனால், எங்களை எல்லாம் கடத்தி வந்து என்ன பண்ணப் போகிறீர்கள்? நீங்கள் செய்வது சரியா? எங்களை வீடுகளில் தேடுவார்களே....!'' என்று சுதன் சொன்னதும் குரூரமாகச் சிரித்த இராமபுத்திரன் பதில் கூறாது, "உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் இன்னும் இருக்கிறது. அதனால், இன்னொரு அதிசயத்தைக் காட்டுகிறேன் வாருங்கள்'' என்று கூறியபடியே இயந்திர வாகனத்துக்கு அழைத்துவந்தார். வாகனச் சாரதி ஆசனத்தில் ரொபோ தயாராக இருந்தது. அனைவரும் வாகனத்தில் ஏறியதும் இராமபுத்திரன்,

"தம்பிகளா! உங்களது ஆசனத்துக்கு அருகில் இருக்கும் பெட்டியைத் திறந்து உள்ளே இருக்கும் ஆடைகளை அணிந்து கொள்ளுங்கள்'' என்று கூறினார்.

சுதனும் பிரியனும் அவ்வாறே செய்தார்கள். ஆளுக்கொரு தலைக்கவசத்தைக் கொடுத்து அணிந்து கொள்ளும்படி கூறினார். மூக்கு நுனியைத்தவிர, அனைத்துத் தலைப்பாகங்களையும் அது மறைத்துக் கொண்டது.

"இப்போது கழுத்துப்பட்டிக்கு அருகில் இருக்கும் கறுப்புப் பட்டனை அழுத்துங்கள். உங்களது கேட்கும் தொனி அதிகரிக்கும். தவிர, மூக்குக்கு அடிப்பாகமாக உங்களது ஆடையில் ஒலிவாங்கி (மைக்) இருப்பதால் உங்களது பேச்சு எனக்கு துல்லிய

## பறக்கும் வாகனம்!



மாகக் கேட்கும்....!''

"இதெல்லாம் ஏன் செய்ய வேண்டும்?'' என்று கேட்டான் பிரியன்.

"காரணம் இருக்கிறது. இப்போது நாங்கள் வடதுருவத்திற்குப் போகப் போகிறோம்.''

"வட துருவத்துக்கா.....? அங்கு பனிப்பாறைகளும் காடுகளும் இருக்குமாமே! ஐஸ்கட்டிகள் குன்றுகள் போன்று குவிந்து கிடக்குமாம். தாங்க முடியாத குளிராகவும் இருக்குமாமே?'' என்றான் சுதன்.

"ஆம் அப்படித்தான் இருக்கும். ஆனால், இது நாங்கள் உருவாக்கியிருக்கின்ற மாதிரித் துருவம். எங்களுடைய கட்டுப்பாட்டில் அது இருப்பதால் பயப்படத் தேவையில்லை'' என்று இராமபுத்திரன் கூறிக் கொண்டிருக்கும் போதே, அவர்கள் அமர்ந்திருந்த வாகனம் அப்படியே மேலெழும்பிப் பறக்க ஆரம்பித்தது. போகப் போக குளிர்காற்று ஊடுருவியது. திடீரென மிகக் கடுமையான குளிர் உடம்பைத் தாக்கியது.

"அது என்ன? ஏதோ, மிருகங்கள் மாதிரித் தெரிகிறதே!'' ஆர்வ மேலிட்டால் உற்சாகக் குரலில் கேட்டான் சுதன்.

"ஓ! அதுவா? துருவக் கரடிகள்....!'' என்று சிரித்தபடி சொன்னார் இராமபுத்திரன்.

சுதனும் பிரியனும் புரியாமல் விழித்தார்கள். பூமியில் ஏறக்குறைய பத்து லட்சம் விலங்கினங்கள் இருப்பதாக ஓர் ஆராய்ச்சித் தகவல் ஞாபகம் வர அத்தனை இனங்களும் இங்கே இருக்குமா என இருவரும் சிந்தித்தனர்.

வானிலும் தரையிலும் ஐஸ் விதைக்கப்பட்டு விளைந்து கிடப்பது போன்ற காட்சியைக் கண்டு அவர்கள் வியந்தார்கள். "இங்கே நாங்கள் சுழலும் தரையை உருவாக்கியிருக்கின்றோம்'' என்று இராமபுத்திரன் கூறவும் சுதனும் பிரியனும் ஒருவரையொருவர் பிரமிப்புடன் பார்த்துக்கொண்டார்கள்.

(தொடரும்)

இயற்கையான சூழலில் அமைந்துள்ள அந்தக் குருகுலத்தில் பல சீடர்கள் தங்கிக் கல்வி பயின்றனர். குரு கண்டிப்பானவர். தத்துவங்கள் போதிப்பதில் மிக வல்லவர். அதனால் சீடர்கள், அவரிடம் பயபக்தியுடன் நடந்துகொண்டனர். பாடம் நடத்துவதில் குரு ஒரு விடயத்தைப் பின்பற்றுவார். ஒரு நாளைக்கு ஒரே ஒரு பாடம் மட்டும் நடத்துவதே அவரது முறையாகும். அதையும் சீடர்களுக்குத் தெளிவாகப் புரியும்படி கற்றுக்கொடுப்பார். ஒரே நேரத்தில் அடுத்தடுத்து பல பாடங்கள் கற்பிப்பதை அவர் விரும்பவில்லை. சீடர்களுக்கும் அந்த அணுகுமுறை நன்றாகவே பிடித்திருந்தது.

ஆனால், ஒரே ஒரு சீடனுக்கு மட்டும் அந்த முறை பிடிக்கவில்லை. ஒருமுறை கற்பித்த விடயத்தையே குரு திரும்பத் திரும்பக்

# குருவின் கல்வி முறை



கற்பித்துக்கொடுப்பதை அவன் வெறுத்தான். குருவின் மேல் அவனுக்குக் கோபம்கூட வந்தது. ஒருநாள் அவன் தன் எண்ணத்தை குருவிடம் வெளிப்படுத்தியே விட்டான்.

"குருவே! ஒரே பாடத்தை திரும்பத் திரும்பக் கற்பதால், அது மனதில் நன்கு பதியும் என்பது உண்மைதான். அதே சமயம் அது ஒருவித சலிப்பையும் ஏற்படுத்துகிறது. ஒரு நேரத்தில் பல விடயங்களைப் பலவிதமான உதாரணங்களுடன் கேட்டால், மனதிற்கு இதமாக இருக்கும் அல்லவா!'' என்றான் அந்த சீடன்.

குரு அவனை அமைதியாகப் பார்த்தார். எழுந்து தோட்டத்தின் மூலைக்குப் போனார். அங்கிருந்த பெரிய பஞ்சாரக் கூடையைத் திறந்துவிட்டார். உள்ளே அடைக்கப்பட்டிருந்த பத்துக் கோழிகள் விடுதலை கிடைத்த சந்தோஷத்தில் சிறகுகளை அடித்துக் கொண்டு வெளியே ஓடின.

"அந்தப் பத்துக் கோழிகளையும் பிடித்து வா!'' என்று அந்த சீடனுக்குக் கட்டளையிட்டார் குரு.

"அவ்வளவுதானே! இதோ ஐந்து நிமிடத்தில் பிடித்துக்கொண்டு வருகிறேன்!'' என்று கூறி விட்டு சீடன் கோழிகளைத் துரத்திக்கொண்டு ஓடினான்.

அவன் துரத்துவதைக் கண்டதும், கோழிகள் சிதறிப் பல திசைகளிலும் ஓடின. சீடன் விடாமல் அவற்றைத் துரத்தினான். கோழிகள் சிக்கவில்லை. சீடனும் விடவில்லை. ஓடி ஓடி ஒரு கோழியைக் கூடப் பிடிக்க முடியாமல் களைத்துப்போனான்.

அப்போது குரு, "அந்தக் கறுப்பு நிறக் கோழியை மட்டும் பிடி!'' என்றார். சீடன் அந்த கறுப்பு நிறக் கோழியை நோக்கிப் பாய்ந்தான். அதையே குறி வைத்து விரட்டினான். சில நிமிடங்களிலேயே சீடன் அதைப் பிடித்துவிட்டான். அவன் முகத்தில் புன்னகை. குரு அவனைத் தீர்க்கமாகப் பார்த்தார்.

"ஒரு நேரத்தில் ஒரு விடயத்தை மாத்திரம் பின்பற்று. அதில் வெற்றி கிடைக்கும். ஒரு நேரத்தில் பல செயல்களைப் பின்பற்றினால் எல்லாக் கோழிகளையும் பிடிக்க முடியாமல் தோல்வியடைந்தது போல, எல்லாவற்றையும் நீ இழந்து நிற்பாய்!'' என்றார்.

சீடன் தன் தவறினை உணர்ந்தான். குருவின் கல்வி முறை அப்போதுதான் அவனுக்குத் தெளிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடற்பயிற்சிகள் ஏன் அவசியம்?



**இலங்கையிலுள்ள பெருமளவான மக்கள் பலதரப்பட்ட நோய்களின் பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர். உடலுக்குத் தேவையான உடற்பயிற்சிகள் இன்மையே இந்த நோய்கள் அனைத்திற்கும் முக்கிய காரணம் எனலாம். அன்றாடம் நாம் செய்யும் வேலைகளிலேயே, நம் உடலுக்குத் தேவையான பயிற்சிகள் அடங்கியுள்ளன. எனினும், நாம் அவற்றை சரிவரச் செய்யாமல் இருப்பதனாலேயே இவ்வாறு இலகுவில் நோய்த் தொற்றுகளுக்கு இலக்காகின்றோம்.**

## உடற்பயிற்சி என்றால் என்ன?

'உடற்பயிற்சி' என்பது மனதின் சக்தியை வலுப்படுத்தி, எமது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு செயற்பாடாகும். உடற்பயிற்சிகள் ஏன் செய்யப்பட வேண்டும்? என்பதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள், தசைநார்களை வலுப்படுத்தல், குருதிச் சுற்றோட்ட செயற்பாட்டினை மேம்படுத்துதல், உடல் நிறையைக் குறைத்தல், உயரத்திற்கு ஏற்ற நிறையைப் பேணுதல் என்பனவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

## உடற்பயிற்சியின் வரலாறு

உடற்பயிற்சியின் வரலாறு கி.மு. 65 இலிருந்து ஆரம்பமாகின்றது. மார்கஸ் சிஸேரோவும் (கி.மு.106 -கி.மு. 43), ஜெரி மொரிஸ் (1949 மற்றும் 1953 இல்) தலைமையிலான குழுவும் மேற்கொண்ட ஆய்வுகளுக்கமைய, உடல் ரீதியில் நன்மைகளை அளிக்கவும் உளவியல் சமநிலையைப் பேணுவதற்கும் உடற்பயிற்சி உதவுவதாக கண்டுபிடிக்கப்பட்டது.

## உடற்பயிற்சிகளின் அவசியம்

குறிப்பாக, கோர்டிசோல் (Cortisol) என்ற ஹோர்மோன் உற்பத்தியை உடற்பயிற்சி குறைக்கின்றது. அதேபோன்று, நொரெட்ரினலின் மற்றும் அட்ரினலின் ஹோர்மோன்களின் உற்பத்தி அதிகரிப்பு, உடலின் வெப்பநிலை அதிகரிப்பு, இதயத்துடிப்பு மற்றும் சுவாசத்தின் வேகம் அதிகரிப்பு, தசைகளுக்கான குருதிச் சுற்றோட்டம் அதிகரிப்பு ஆகிய செயற்பாடுகள் உடற்பயிற்சியினால் உடலினுள் நிகழ்கின்றன. இதனால், உடல்-உள சமநிலையை சரிவரப் பேண முடிகின்றது.

அதுமட்டுமன்றி, உயர் இரத்த அழுத்தம், நிறை அதிகரிப்பு, இதய நோய்களைக் குறைத்தல் ஆகிய நேரடி நன்மைகளும் கிடைக்கின்றன. மேலும், நீரிழிவு நோய், நித்திரையின்மை ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்துவதோடு, ஆரம்பக்கட்டத்திலேயே அவற்றைத் தடுக்கும் நிவாரணியாகவும் உடற்பயிற்சி உள்ளது.நோய் எதிர்ப்புசக்தி என்ற ரீதியில் நோக்கும்போது, உடற்பயிற்சியில் ஈடுபடுவதனால், எமது உடல் கிருமித் தொற்றிலிருந்து பாதுகாக்கப்படுகின்றது. குறிப்பாக, சாதாரண உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதனூடாக, சளி மற்றும் சுவாசம் சார்ந்த நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பினை 29 சதவீதத்தினால் குறைக்க முடியும் என்று ஆய்வுகள் நிரூபித்துள்ளன.



## பலதரப்பட்ட உடற்பயிற்சிகள்

**1. உடலை வளைக்கும் உடற்பயிற்சி / நெகிழ்வுத்தன்மை உடற்பயிற்சி (Flexibility Exercise):** இந்த உடற்பயிற்சியின்போது, தசைகள் வலுப்படும், உடலின் நெகிழ்வுத்தன்மை அதிகரிக்கும், மூட்டுக்கள் பலம் பெறும்.

**2. ஒட்சிசனைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உடற்பயிற்சி (Aerobic Exercises):** நீண்டநேரம் மெதுவான அசைவுகளோடு செயற்படும் உடற்பயிற்சிகள் இதனுள் அடங்கும். இத்தகைய உடற்பயிற்சிகளை ஆரம்பிக்க முன்னர் உடலைத் தயார்படுத்தும் வகையிலான Warm up பயிற்சிகளைச் செய்வது அவசியமாகும். அதேபோன்று, இந்த உடற்பயிற்சியின் முடிவில் Cool down பயிற்சிகளைச் செய்ய வேண்டும். சைக்கிளோட்டம், நீச்சல், நடத்தல், டென்னிஸ் விளையாட்டு என்பனவும் இதில் அடங்கும். இந்த உடற்பயிற்சியில் ஈடுபடுவதனால் தசைகள் வலுப்படும். உயர் இரத்த அழுத்தம் குறையும். சிவப்பணுக்கள் உற்பத்தி அதிகரிக்கும். சுகமான நித்திரை கிடைக்கும். ஒற்றைத் தலைவலியைக் கட்டுப்படுத்த முடியும்.

**3. ஒட்சிசன் இன்றி மேற்கொள்ளப்படும் உடற்பயிற்சிகள் (Anaerobic Exercises):**

உடலுக்கு துரித உடற்பயிற்சிகளை வழங்குதல் இதில் அடங்கும். இதனால், துரிதகதியில் தசைகளைப் பலப்படுத்த முடியும். நிறை தூக்குதல், வேகமாக ஓடுதல் போன்ற உடற்பயிற்சிகள் மூலம் உடலுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

## உடற்பயிற்சியின் போது கவனமாக இருங்கள்

உடற்பயிற்சி செய்யும்போது உடலை அதிகம் வருத்த வேண்டாம். தொடர்ச்சியாக உடற்பயிற்சி செய்துவிட்டு இடையில் நிறுத்திவிடுவதும் உகந்ததன்று. இதனால், உடலுக்கும் மனதுக்கும் பாதிப்பு ஏற்படும்.உடற்பயிற்சி செய்யும்போது போஷாக்கு மட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, நிறையுணவை உட்கொள்ளுதல் உடலுக்கு நன்மை தரும்.

-குமுதினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னிசை கரு

'இசை' செவிக்கு இனிமை தருகின்றது. பாடலொன்று மேலும் இனிமை பெற இசை அவசியமாகின்றது. இன்னிசையை வழங்குவதில் இசைக் கருவிகளின் பங்கு அளப்பரியது. இசைக்கருவிகளை பல வகைகளாகப் பிரிக்கலாம். நரம்புக் கருவிகள் (தந்திக் கருவிகள்), தோல் கருவிகள், துளைக்கருவிகள், கஞ்சக் கருவிகள் (உலோகக் கருவிகள்) என அந்த வகைப்படுத்தல் அமையும். எனவே, இங்கு நரம்புக் கருவிகள் பற்றி சற்று நோக்குவோம்.

## வயலின்



இது இலங்கையில் மிகப் பிரபல்யம் பெற்ற இசைக் கருவியாகும். வயலினின் தோற்றம் குறித்து பலவிதமான கருத்துக்கள் உள்ளன. இந்தியாவிலேயே வயலினின் தோற்றம் முதலில் நிகழ்ந்ததாக ஒரு கருத்தும் உண்டு. 'வியோலா' என்ற இசைக் கருவியின் அடிப்படையில் வயலின் உருவானதாகவும் கூறப்படுகின்றது. 'ராவண ஹஸ்தம்' என்ற இசைக் கருவி இந்தியா, பேர்சியா (இன்றைய ஈரான்), அரேபியா ஆகிய நாடுகளினூடாக, ஐரோப்பாவுக்குச் சென்று வயலினாக பரிணாமம் பெற்றதாகவும் ஒரு கருத்து நிலவுகின்றது. வட இந்திய மற்றும் கர்நாடக சாஸ்திரிய இசையிலும் மெல்லிசையிலும் வயலின் இசைக் கருவி பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. எந்தவோர் இசைப் பாணிக்கு ஏற்பவும் இசையை மீட்டுவதில் வயலின் முன்னிலை வகிக்கின்றது. வியோலா, ச்செலோ மற்றும் டபள்பேஸ் என்பன வயலின் குடும்பத்தினைச் சேர்ந்த இதர இசைக் கருவிகள் என்று கருதப்படுகின்றன.

## சந்தூர்

'நூறு தந்திகள்' என்ற அர்த்தத்தினைக் கொண்ட சந்தூர், காஷ்மீர் பிராந்தியத்தை பிறப்பிடமாகக் கொண்டது. 'நூறு தந்தி வீணை' என்றும் இந்தக் கருவியை அழைப்பர். குழுப்பாடல்களின்போதே இந்தக் கருவியினை பெருமளவில் பயன்படுத்துவர். தற்போது வட இந்திய சாஸ்திரிய இசையிலும் இக்கருவியினைப் பயன்படுத்துகின்றனர்.



## சரோட்



இந்தியாவில் தோன்றிய சரோட் (Sarod) என்ற இந்த இசைக் கருவி, சாஸ்திரிய இசையில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. தனிநபர் வாத்தியத்துக்கே இந்தக் கருவி உபயோகப்படுகின்றது. வடிவத்தில் 'ரபாப்' என்ற இசைக் கருவியினை ஒத்தது. இது நான்கு தந்திகளையும் உப தந்திகள் பன்னிரெண்டையும் கொண்டது. இசை மீட்டுவதற்கு முக்கோண வடிவிலான சிறிய துண்டொன்று அல்லது கொம்புத்துண்டு பயன்படுத்தப்படுகின்றது. ஸ்வர வீணை, சூர்ஸ்ரிங்கார் ஆகிய இசைக் கருவிகள் இந்த சரோட் இசைக் கருவி குடும்பத்தைச் சேர்ந்தவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரம்புக் கருவிகள்

## மெண்டலீன்



மெண்டலீனின் பிறப்பு இத்தாலியில் நிகழ்ந்ததாகவே கருதப்படுகின்றது. பிற்காலங்களில் இந்த இசைக் கருவி ஐரோப்பிய நாடுகள் எங்கும் வியாபித்தது. ஆரம்ப காலங்களில் எளிய வகை சாஸ்திரிய இசைக்கே இந்தக் கருவி பயன்படுத்தப்பட்டது. பின்பு இதனை மேற்கத்தேய சாஸ்திரிய இசையில் உதவி வாத்தியக் கருவியாகப் பயன்படுத்த ஆரம்பித்தனர். 16 ஆம் மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை வந்த வெளிநாட்டவர்களினால் மெண்டலீன் இசைக் கருவி இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ஐரோப்பிய நாடுகளில் பிரபல்யம் பெற்ற இசைக் கருவியாக மெண்டலீன் திகழ்கின்ற அதேவேளை, இந்திய கர்நாடக சங்கீதப் பாரம்பரியத்திலும் மெண்டலீனின் பாவனை பரவலாக உள்ளது. நான்கு தந்திகள் கொண்ட மெண்டலீனின் தந்தி அதிர்வுகள் ப்ளெக்ட்ரம் மூலமே உருவாக்கப்படுகின்றன.

## எஸ்ராஜ்



எஸ்ராஜ் எனப்படும் இந்த இசைக் கருவியும் இந்திய இசைக் கருவியாகும். வங்க தேசத்திலேயே இந்தக் கருவி பயன்பாட்டில் உள்ளது. இலங்கையில் சாஸ்திரிய மற்றும் மெல்லிசையில் பயன்படுத்தப்படுகின்றது. இதில் பிரதானமாக நான்கு தந்திகள் உள்ளன. உப தந்திகள் ஏழு உள்ளன. தோளில் வைத்து இசைக்கப்படும் இக்கருவியானது, இறுக்கமாகக் கட்டப்பட்ட தந்தி கொண்ட வில்லால் இசைக்கப்படுகின்றது.

## சாரங்கீ



இந்திய இசைக் கருவிகளிலேயே, மிகவும் இனிமையான இசையைக்கொண்ட இசைக் கருவியாக சாரங்கீ கருதப்படுகின்றது. இதனை 'இந்திய வயலின்' என்றும் கூறுவர். இந்திய சாஸ்திரிய சங்கீதத்தில் இந்தக் கருவியின் பயன்பாடு அதிகம் உள்ளது. இதில் பிரதான தந்திகள் மூன்று உள்ளன. ஒருசிலவற்றில் உப தந்திகளும் உள்ளன.

## சித்தார்




இந்திய பாரம்பரியம்கொண்ட சித்தார் சாஸ்திரிய சங்கீதத்திலும் மெல்லிசையிலும் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்திய இசை இலங்கையில் பிரபல்யம் பெற்றவேளையில்தான் சித்தார் கருவியும் இங்கு பிரபல்யம் பெற்றுள்ளது. சித்தார் இசைக் கருவியானது, 'ஊட்' எனப்படும் பேர்சிய இசைக் கருவியைப் போன்றது என்று குறிப்பிடப்படுகின்றது.

## கிட்டார்



பண்டையகாலம் முதல் பயன்பாட்டில் இருந்து வந்த இசைக் கருவியாகக் கருதப்பட்டாலும் அதற்கான எழுத்து மூலமான சான்றுகள் 14 ஆம் நூற்றாண்டிலேயே கிடைத்தன. மேற்கத்தேய இசைக் கருவியாகக் கருதப்படும் கிட்டார், ஸ்பெய்னில் தோற்றம் பெற்றதாகவே கருதப்படுகின்றது. 16 ஆம் நூற்றாண்டில் இந்த இசைக் கருவி ஸ்பெய்ன் நாட்டவர்களிடையே மிகவும் பிரபல்யம் பெற்றிருந்தது. அதேபோன்று, வட இந்திய இசைகளிலும் கிட்டார் பயன்படுத்தப்படுகின்றது. ரிதம் கிட்டார், லீட் கிட்டார், பேஸ் கிட்டார், ஹவாயன் கிட்டார் என்றவாறு கிட்டாரில் பல வகைகள் உள்ளன.


## தம்பூரா



இது சாஸ்திரிய இசையில் பெருமளவு பயன்படுத்தப்படும் ஓர் இசைக் கருவியாகும். வட இந்திய மற்றும் தென்னிந்திய இசையில் தம்பூராவைப் பயன்படுத்தியே ஸ்ருதி மீட்டப்படுகின்றது. தம்பூராவில் 4 தந்திகள் உள்ளன. சித்தாரைப் போன்று பெரிய கும்பம் உள்ளது. ஆண், பெண் குரல்களுக்கு ஏற்றவாறு தம்பூராவை மீட்டலாம் என்பது இந்த இசைக் கருவிக்கே உரிய பிரத்தியேக தன்மையாகும்.

## ஸ்வரமண்டலம்

சாஸ்திரிய சங்கீதத்தில் பயன்படுத்தப்படும் இது, ஓர் இந்திய இசைக் கருவியாகும். வடிவத்தில் சந்தூரைப் போன்றது.




## வீணை

இந்துக்கள் வீணையை வணங்குவதற்குரிய இசைக் கருவியாகக் கருதுகின்றனர். சிவபெருமானால் இந்த இசைக் கருவி படைக்கப்பட்டாலும் கல்விக்குரிய கடவுளான சரஸ்வதியின் கரங்களில் தவழுவதாலும் போற்றுதற்குரிய பெருமை வீணைக்கு கிடைத்துள்ளது. பாரதத்தில் முதன்முதலாக உருவாக்கப்பட்ட இசைக் கருவியாகவும் வீணையைக் குறிப்பிட முடியும். ஆரம்ப காலங்களில் பயன்படுத்தப்பட்ட வீணையில் மேற்புறத் தண்டுப்பகுதிகள் இருக்கவில்லை. இங்கு இரண்டு கும்பங்களைக் காண முடியும்.



## தில்ருபா

குறைவான பயன்பாட்டைக் கொண்ட இசைக் கருவியான தில்ருபா, வடிவத்தில் எஸ்ராஜ் இசைக்கருவியைப் போன்றது. வட இந்திய இசையில் தனிநபர் பாவனைக்குரியதாகும்.



அஷ்விதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்

* இலங்கையில் எத்தனை கல்வி மாவட்டங்கள் உள்ளன. எத்தனை கல்வி வலயங்கள் உள்ளன?
  கல்வி மாவட்டங்கள் - 31
  கல்வி வலயங்கள் - 96



* AK- 47 துப்பாக்கி எந்த ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது? இதனை கண்டுபிடித்தவர் யார்? அவர் எந்த நாட்டவர்?
  1947 இல் ரஷ்யாவைச் சேர்ந்த மிக்ஹைல் கலாஷினி கோவ் என்பவர் AK- 47 துப்பாக்கியைக் கண்டுபிடித்தார்



* இலங்கையில் அதிகளவிலான பறவை இனங்களைக் காணக்கூடிய பிரதேசம் எது?
  சிங்கராஜா வனம்



* ஒரு யுனிட் இரத்தத்தின் அளவு எவ்வளவு?
  1 யுனிட் இரத்தம் 450 மி.லீற்றர்



* 'டெசிபல்' அளவு என்றால் என்ன?
  ஒலியின் வேக அளவைக் குறிப்பது 'டெசிபல்' அளவாகும்.



* இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றிருந்த நதிகள், முன்னர் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டன. இன்று புதிய பெயர்களால் அழைக்கப்படுகின்றன. அந்தவகையில், பின்வரும் நதிகளின் பழைய மற்றும் புதிய பெயர்கள் எவை?
  1. கோண நதி - கலா ஓயா
  2. கப்பரக்கந்த - மாணிக்க கங்கை
  3. கல்யாணி - களனி கங்கை



# பலவித நோய்களை ஏற்படுத்தும் மன அழுத்தம்

அமைதியான குடும்பச் சூழல் பெரும்பாலான மன அழுத்தத்தைக் குறைக்கின்றது. குழப்பங்களையோ, எரிச்சல்களையோ குவிக்கும் இடமாக குடும்பச் சூழல் அமையக்கூடாது. மாறாக, அவற்றை நீக்கும் ஒரு ஸ்தானமாகவே இருக்க வேண்டும் என்பதனை குடும்பத்தினர் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். இவ்வாறான மன அழுத்த சூழ்நிலைகளைக் குறைக்க வீட்டினுள் நுழைந்தவுடன் மனம் மகிழ்ச்சியடையும் வகையில் குடும்பத்தினரோடு, அன்பான முறையில் உரையாடுதல் மிகவும் முக்கியமான விடயமாகும்.



அநேகமாக ஆவேசம், கோபம் என்பனவே மன அழுத்தத்தின் வெளிப்பாடாக உள்ளது. தெளிவான, அமைதியான மனம், அறிவு இவற்றைக்கொண்டு மன அழுத்த நிலைகளை அடக்க வேண்டும். இந்த மன அழுத்தமே, பலவிதமான நோய்களை ஏற்படுத்துவதில் முன்னிற்கின்றது. குறிப்பாக, 'மிக்ரேன்' எனப்படும் ஒற்றைத் தலைவலி, பக்கவாதம், ஆஸ்துமா உட்பட, பல நோய்களை மன அழுத்தம் கொண்டு வருகிறது. இந்த மன அழுத்தமானது, சரியான திட்டமிடல்கள் இன்றி செயற்படுபவர்களை மிக எளிதில் பிடித்துக்கொள்கிறது. எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதை சரியாக உணர்ந்தவர்கள் மன அழுத்தம் உருவாகும் சூழலை பெரும்பாலும் விலக்கி விடுகிறார்கள். எனினும், அனைத்து வேலைகளையும் இழுத்துப் போடுபவர்கள் மன அழுத்தப் பிரச்சினையிலிருந்து தப்பமுடியாது. இத்தகைய, உடல் மற்றும் உள ரீதியிலான அழுத்தம் மனிதனுக்கு பல இன்னல்களைத் தருகிறது. எமக்கு ஏற்படும் சிறு, சிறு அழுத்தமான சூழல்களைத் தவிர்க்காதபோது, அல்லது தீர்க்காதபோது அழுத்தம் அதிகரித்து பெரிய இன்னல்களுக்கு ஆளாகிவிட நேரிடுகின்றது.

இந்த மன அழுத்தம் இரு வகைகளில் ஏற்படலாம். ஒன்று, எம்மைச் சூழ்ந்த சமூகத்தின் செயற்பாடுகளால் எமக்குள் ஏற்படுவது, இன்னொன்று, எமது வாழ்க்கை முறை, சிந்தனைகளினால் ஏற்படுவது. நேர் சிந்தனை உள்ளவர்கள் எல்லாவற்றையும் நல்ல விதமாக நோக்குகிறார்கள். ஆனால், நேரெதிராகச் சிந்திப்பவர்களே இங்கு பிரச்சினைக்குரியவர்கள். இவர்கள் பாரிய மன அழுத்தத்துக்குள் தம்மை அறியாமலேயே இட்டுச் செல்லப் படுகின்றனர். (தொடரும்)

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)


கெ.நிதிநிலவன், நவாலி வடக்கு, மானிப்பாய்.
அங். இல: 5044


ஆர்.பஸாரத், கல்பிட்டி வீதி, நுரைச்சோலை.
அங். இல: 5045


எஃப்.பாத்திமா சப்னா, ஆலிம் வீதி, அக்கரைப்பற்று-04.
அங். இல: 5046


ஜெ.ரதீஷன், விநாயகபுரம், திருகோணமலை.
அங். இல: 5047

## விஜய் மாணவர் கழகம்


ஏ.அப்துர் ரஹ்மான், மஹகொட, பேருவளை.
அங். இல: 5048


ப.மைத்ரேயி, பிரதான வீதி, மட்டக்களப்பு.
அங். இல: 5049


ஜெ.ஜெயதீபன், அம்பலவன் பொக்கனை, முல்லைத்தீவு.
அங். இல: 5050


எஃப்.சஹ்றானி நிஸ்தா, அல்-ஹிலால் வீதி, சாய்ந்தமருது-13.
அங். இல: 5051


எஸ்.புவனா, எல்கடுவ வீதி, வரகஸ்தன்ன.
அங். இல: 5052


ட.நிரஞ்சன், ஒலிபன் கீழ்ப்பிரிவு, நுவரெலியா.
அங். இல: 5053


எல்.எம்.றுஸ்லி, வேப்பங்குளம், வவுனியா.
அங். இல: 5054


எம்.ரிழ்வான், சுற்றுவட்ட வீதி, மாதன்கடவல.
அங். இல: 5055

SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறு பட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்




படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

பாடசாலை: ..............................

வகுப்பு: ..............................


திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்களை முன்னறிவிக்கும் பணியில் 'ISS'





நாம் வாழும் பூமியின் வளிமண்டலத்தை அவதானித்து இயற்கை அழிவுகளை முன்கூட்டியே அறிந்துகொள்ள உதவக்கூடிய கருவி ஒன்று சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) பொருத்தப்பட இருப்பதாக சர்வதேச விண்வெளி நிலையத்தின் ISS-36 குழுவின் தலைவர் பவல் வினொக்ராடொவ் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் Soyuz TMA-08M ரொக்கெட்டில் சர்வதேச விண்வெளி நிலையத்தை நோக்கிப் பயணம் செய்யவிருக்கும் புதிய விண்வெளி வீரர்களே, விண்வெளி நிலையத்தின் வெளிப்பகுதியில் இந்தக் கருவியைப் பொருத்தவுள்ளனர்.

புவியின் வளிமண்டலத்தின் மேற்படலத்தில் இடம்பெறும் ப்ளஸ்மா மற்றும் அலைகளை ஆராயும் சிக்கலான உணர்கருவிகளையும் வானலை வாங்கிகளையும் இந்தச் சிறப்புக் கருவி கொண்டிருக்கின்றது. இதன்மூலம் பூமியில் ஏற்படவிருக்கும் நிலநடுக்கங்கள் உட்பட, ஏனைய இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிந்துகொள்ளலாம் என வினொக்ராடொவ் மேலும் தெரிவித்துள்ளார்.

# சந்திரனில் நீர் இருந்ததற்கான அறிகுறி



## மிச்சிகன் பல்கலைக்கழக நிபுணர்கள் தெரிவிப்பு

சந்திரனை ஆய்வுசெய்யும் நோக்கில் அமெரிக்காவினால் செயற்படுத்தப்பட்ட 'அப்பலோ மிஷன்' திட்டத்திற்கமைய, அங்கிருந்து எடுத்து வரப்பட்ட பாறைகளைத் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்தி, சந்திரனில் நீர் இருந்ததா? என்பதைக் கண்டறிவதில் ஆய்வாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆய்வில் ஈடுபட்ட மிச்சிகன் பல்கலைக்கழக நிபுணர்கள் தற்போது அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அதன்படி, சந்திரனில் இருந்து எடுத்து வரப்பட்ட பாறைப் படிவங்களை ஆய்வு செய்ததை அடுத்து, சந்திரனில் நீர் இருந்ததற்கான அறிகுறி உள்ளது என உறுதி செய்துள்ளனர்.

இது பற்றி அவர்கள் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது; சந்திரன் உருவானபோது, அது ஈரத்தன்மையுடன் இருந்திருக்க வேண்டும். அது முழு வடிவமாக மாறியபோது, அதன் ஈரத்தன்மை குறைந்து கெட்டியாகிப் பாறையாக மாறி இருக்கலாம். அந்தப் பாறைகளில் நீர்த்தன்மையுடன் கூடிய கனியத் துகள்கள் இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. எனவே, சந்திரனில் நீர் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன என்று அந்த அறிக்கையில் விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர்.



# பரிசுத்த வாரமும் பாஸ்கா பெருவிழாவும்



திருச்சபையானது, ஆண்டுதோறும் கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகின்றது. இத்தினம் ஈஸ்டர், உயிர்த்த ஞாயிறு, பாஸ்கா விழா என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. இந்த ஆண்டு ஈஸ்டர் விழா (பாஸ்கா விழா) மார்ச் மாதம் 31 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது.

ஈஸ்டர் விழாவுக்கு முன்னதாக தபசுகாலம் ஆரம்பமாகியிருந்தது. இந்த தபசுகாலம் நாற்பது நாட்கள் நீடிப்பதாகும். இவ்வாண்டு தபசுகாலம் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதியுடன் ஆரம்பமாகியது. குருத்தோலை ஞாயிறுடன் தபசுகாலம் முடிவுற்று, பரிசுத்த வாரம் ஆரம்பமாகியது. இந்த வாரத்தைக் கிறிஸ்தவர்கள் புனித வாரமாகக் கருதி, பக்தி முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.





பெரிய வியாழன், பெரிய வெள்ளி என்பன பரிசுத்த வாரத்தில் வரும் முக்கிய தினங்களாகும். அத்தினங்களில் ஆலயங்களில் சிறப்பான வழிபாடுகள் நடைபெறும். பெரிய வியாழனன்று சீடர்களின் பாதங்களை யேசு கழுவியதன் நினைவாக, குருவானவர் பன்னிருவரின் பாதங்களைக் கழுவும் சடங்கு நடைபெறும். இது அன்பினதும் தாழ்ச்சியினதும் அடையாளமாகும். பெரிய வெள்ளியன்று யேசுவின் பாடுகள் சிறப்பாகத் தியானிக்கப்படுகின்றன. பெரிய சனிக்கிழமை எனப்படும் அல்லேலூயா சனிக்கிழமையன்று பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு நடைபெறும். அன்றைய தின வழிபாட்டில் புதிய நெருப்பு, புதிய நீர் என்பனவும் ஆசீர்வதிக்கப்படும். உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமான பாஸ்கா மெழுகுவர்த்தி புதிய நெருப்பிலிருந்து ஏற்றப்படுவதுடன், அந்த மெழுகுவர்த்தியிலிருந்து ஏனைய மெழுகுவர்த்திகளும் (பக்தர்கள் கையில் வைத்திருப்பவை) ஏற்றப்படும்.

பாஸ்கா திருவிழிப்புடன் ஆரம்பமாகும் ஈஸ்டர் விழா, ஞாயிறு முழுவதும் தொடர்கிறது. கிறிஸ்தவர்கள் கொண்டாடும் திருவிழாக்களில் இதுவே முக்கிய திருவிழாவாகும். யேசு சாவினின்று உயிர்த்தெழுந்ததையே கிறிஸ்தவர்கள் 'உயிர்த்த ஞாயிறு' அல்லது 'ஈஸ்டர் திருநாள்' எனக் கொண்டாடுகிறார்கள்.



யேசுவின் உயிர்ப்பானது, எமக்கும் உயிர்ப்பு-மறுவாழ்வு என்பன உண்டு என்பதை உறுதிப்படுத்துகின்றது. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருடைய விசுவாசமும் அடங்கியிருப்பது கிறிஸ்துவின் உயிர்ப்பிலேயே ஆகும். இதனால்தான் கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் விழாக்களிலேயே மிக முக்கியமானதும் ஆன்மீக அர்த்தங்கள் நிறைந்ததுமான விழாவாக ஈஸ்டர் தினம் எனும் உயிர்த்த ஞாயிறு விழா கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - I

பெயர்: ...................................................... நேரம்: 45 நிமிடங்கள்

23) பின்வரும் முகங்களில் சோகமான முகபாவனையைக் காட்டும் முகம் எது?




24) ஜூன், ஜூலை மாதங்களில் மேற்கு வானில் தோன்றும் உடுத்தொகுதி யாது?

1. பெருங்கரடி 2. ஓராயன் 3. கார்த்திகை 4. தென்சிலுவை

25)  இங்கு காட்டப்பட்டுள்ள உடுக்கோலத்திற்கு வழங்கும் பெயர் யாது?

1. ரிஷபம் 2. பெருநாய் 3. தென்சிலுவை 4. ஓராயன்

26) இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடு எது?

1. ஆபிரிக்கா 2. சீனா 3. இந்தியா 4. மலேசியா

27) இலங்கையின் தேசிய கொடியில் பச்சை நிறப்பகுதி குறித்து நிற்பது எதனை?

1. சிங்கள மக்கள் 2. முஸ்லிம் மக்கள்
3. தமிழ் மக்கள் 4. தேசிய ஒற்றுமை

28) இலங்கையின் அரச இலச்சினையில் உள்ள நெற்கதிர்களால் குறிக்கப்படுவது எது?

1. நிலைத்திருத்தல் 2. சௌபாக்கியம்
3. தார்மீகம் 4. தன்னிறைவு

29) 'சிங்கராஜா வனம்' எங்கு அமைந்துள்ளது?

1. குருநாகல் 2. அம்பாறை 3. இரத்தினபுரி 4. மொனறாகலை

30) மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு வகை எது?

1. கியுலொக்ஸ் 2. ஈஸ்டிஸ் இன பெண் நுளம்பு
3. எனோபிலிஸ் பெண்நுளம்பு 4. எனோபிலிஸ் ஆண் நுளம்பு

31) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முதலில் செய்யவேண்டியது எது?

1. மனதைத் தளர்த்துதல் 2. பிரார்த்தனை
3. உடலைத் தளர்த்துதல் 4. மனவுறுதி


32) A, B, C, D ஆகிய பாத்திரங்களில் ஒரே அளவான கறி உப்பை இடும்போது எந்தப் பாத்திரத்திலுள்ள கறி உப்பு விரைவாகக் கரையும்?




33) தேசப்படங்களில் பாலத்தைக் காட்டுவதற்குப் பயன்படும் நியம நிறம் எது?

1. சிவப்பு 2. நீலம் 3. கறுப்பு 4. கபிலம்

34) அமாவாசையிலிருந்து ஒரு வாரத்தின் பின்னர் வானில் காணப்படும் சந்திரனின் வடிவம்




35) புதிதாக வெளியிடப்பட்ட நூறு ரூபாய் தாளில் காணப்படும் நீர்வீழ்ச்சி எது?

1. தியலும நீர்வீழ்ச்சி 2. லக்ஸபான நீர்வீழ்ச்சி
3. பம்பரகந்த நீர்வீழ்ச்சி 4. துன்கிந்த நீர்வீழ்ச்சி

36) பண்டுகாபன் மன்னன் கட்டுவித்த குளம் எது?

1. மின்னேரியாக் குளம் 2. அபய வாவி
3. கலா வாவி 4. கந்தளாய் குளம்

37)  இக்குறியீடு வெளிப்படுத்துவது;

1. கவனமாகக் கையாளுங்கள் 2. தீ பற்ற வைப்பது ஆபத்தானது
3. மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு 4. நொருங்கக்கூடியது

38) 'களனி கங்கை' கடலுடன் கலக்கும் இடம் எது?

1. திருகோணமலை 2. களுத்துறை
3. கொழும்பு 4. அம்பாந்தோட்டை





39) பாடசாலை விளையாட்டுப் போட்டியின்போது, முதலில் நிகழ்வது எது?

1. பாடசாலைக் கொடியேற்றுதல் 2. தமிழ்மொழி வாழ்த்துப் பாடுதல்
3. தேசிய கீதம் இசைத்தல் 4. தேசிய கொடி ஏற்றுதல்

40)  இக்குறியீட்டின்மூலம் விளங்குவது எது?

1. சரணாலயம் 2. தொடர்பாடல்
3. பாதுகாப்பு 4. சமாதானம்

41) இரு உலர் மின்கலங்கள் (C), ஒரு மின்குமிழ் (B), ஓர் ஆளி (S) ஆகியன வயர்த்துண்டுகளின்மூலம் பின்வரும் ஒவ்வொரு விதமாகத் தொடுக்கப்பட்டுள்ளன. ஆளி S ஐ மூடும்போது, மின்குமிழ் ஒளிரும் உரு யாது?




42) | 2 | 3 | / | 0 | 7 | காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்திப் பெறக்கூடிய

1. மிகப்பெரிய நான்கிலக்க எண் யாது? ..............................
2. மிகச் சிறிய நான்கிலக்க எண் யாது? ..............................

43) 2399 உடன் 761 ஐக் கூட்டினால் கூட்டுத்தொகை யாது? ..............................

44) கிராமமொன்றில் 1,496 ஆண்களும் 967 பெண்களும் உள்ளனர். அங்குள்ள மொத்தக் குடித்தொகை யாது? ..............................

45) 520 மாம்பழங்கள் ஐந்து பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ..............................


46) ஒருவருக்கு 4 பென்சில்கள் வீதம் 670 பென்சில்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்? அவ்வாறு கொடுத்த பின்னர் எத்தனை பென்சில்கள் எஞ்சியிருக்கும்? ..............................

47) சில நகரங்களுக்கிடையே உள்ள தூரம் பின்வரும் உருவில் கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.


| | | | | |
|---|---|---|---|---|
| | | | | புத்தளம் |
| | | | கொழும்பு | 142 |
| | | காலி | 116 | 258 |
| | மாத்தறை | 45 | 161 | 303 |
| அம்பாந்தோட்டை | 77 | 122 | 238 | ............ |

மாத்தறையிலிருந்து காலி, கொழும்பு ஊடாக புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது? ..................km


உருக்களின் சுற்றளவைக் காண்க.

48) 

..............................

49) 

..............................

50)  இவ்வுரு ஒரு சிக்னல் (signal) பெட்டி ஆகும்.

1. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ..............................
2. சதுர முகங்களின் எண்ணிக்கை யாது? ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Samsung Game Pad



இலத்திரனியல் சாதனங்களை உற்பத்தி செய்வதில் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றான Samsung நிறுவனமானது, அதிநவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய Game Pad ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது. வயர்லெஸ் தொழில்நுட்பத்தினை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த Game Pad ஆனது, தொடுதிரை தொழில்நுட்பத்தினையும் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது.

கணினி விளையாட்டுப் பிரியர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படும் இச்சாதனமானது, 2 x AAA அளவுடைய மின்கலங்களில் தொழிற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

# பயனற்ற கோப்புக்களை நீக்க உதவும் மென்பொருள்

கணினிப் பாவனையின்போது, கணினியின் வன்தட்டில் பயனற்ற கோப்புக்களும் தற்காலிகமான கோப்புக்களும் அதிகளவில் தங்குகின்றன.

இதனால் வன்தட்டில் அநாவசியமான முறையில் தேவைக்கு மேலதிகமாக இடம் பயன்படுத்தப்படுவதுடன், கணினியின் செயற்பாட்டு வேகமும் குறைகின்றது. இதனால், ஒட்டுமொத்தமாக கணினியின் செயற்றிறனும் குறைவடைகின்றது. எனவே, இவ்வாறு அநாவசியமாகக் காணப்படும் பயனற்ற, தற்காலிக கோப்புக்களை சிறந்த முறையில் தேடி அவற்றை நீக்குவதற்கான வசதியை 'Wise Disk Cleaner' எனும் மென்பொருள் தருகின்றது.

இந்த மென்பொருளானது, அனைத்துவகையான தற்காலிக, பயனற்ற கோப்புக்கள் இருக்கும் இடங்களை விரைவாகத் தேடுவதுடன், அவற்றினை பாதுகாப்பான முறையில் நீக்கக்கூடியது.




இதன் காரணமாக, வன்தட்டில் மேலதிக இடம் அதிகரிக்கப்பட்டு அதன் செயற்பாட்டுவேகம் அதிகரிப்பதால், கணினியின் வினைத்திறனும் அதிகரிக்கப்படுகின்றது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, மார்ச் மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விஜய் நுட்பம்

2013, மார்ச், 27, புதன்கிழமை

# Scanner Mouse





நாம் கணினியைப் பயன்படுத்தும்போது Mouse இன் (சுட்டி) பயன்பாடானது, இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. இதனால், காலத்திற்குக் காலம் பல்வேறு புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக Mouse கள் அறிமுகப்படுத்தப்பட்ட வண்ணம் உள்ளன. அந்த வரிசையில், தற்போது IRIS நிறுவனமானது, OCR தொழில்நுட்பத்துடன்கூடிய 'Scanner Mouse' ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

USB 2.0 இணைப்பிகளை உடைய இந்த Mouse களின் மூலம் எந்தவிதமான மேற்பரப்புக்களில் காணப்படும் எழுத்துக்களையும் scan செய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது.

இதற்காக, குறித்த Mouse இல் காணப்படும் scan செய்வதற்கான பொத்தானை அழுத்தியதும், அந்த Mouse காணப்படும் மேற்பரப்பிலுள்ள எழுத்துக்கள் scan செய்யப்படும்.




இந்த நவீன ரக Mouse களை 79 அமெரிக்க டொலர் பெறுமதிக்கு கொள்வனவு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வெட்டவும்







# ஆங்கில சொல்வளத்தை அதிகரிக்கும் Online விளையாட்டு

எந்த ஒரு மொழியிலும் சொல்வளம் தெரிந்தால் அந்த மொழியில் நாம் வல்லவர்களாக இருக்கலாம். அந்தவகையில், ஆங்கில மொழியில் சொல்வளம் (Vocabulary) அதிகரிக்க நமக்கு ஒரு தளம் உதவுகிறது. ஆங்கில சொல்வளத்தை அதிகரிப்பதை நோக்காகக்கொண்டு Online விளையாட்டாக இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது.




இந்தத் தளத்திற்கு சென்று, புதிதாக ஓர் இலவச பயனாளர் கணக்கை உருவாக்கிக் கொள்வதன் மூலம் இதற்குள் நுழையலாம். ஆங்கிலம் ஆரம்பநிலையில் இருப்பவர்கள் முதல் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் வரை அனைவரும் தங்களுக்குத் தகுந்தபடி Level ஐ தேர்ந்தெடுத்து இங்கு விளையாடலாம். தினமும் அகராதியில் பல வார்த்தைகளைப் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள், இனி Online மூலம் எங்கிருந்து வேண்டுமானாலும் இந்த விளையாட்டை விளையாடி, தங்களின் ஆங்கில Vocabulary அறிவை வளர்த்துக்கொள்ளலாம்.







இதற்கான இணையத்தள முகவரி http://vocabgenii.com என்பதாகும்.






# நோபெல் வழங்கும் அறிவுபூர்வமான விளையாட்டுக்கள்




நோபெல் விருது வழங்கும் நிறுவனம் 30 இற்கும் மேற்பட்ட Online விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றின்மூலம் மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் தங்கள் அறிவை வளர்த்துக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பொழுதுபோக்கிற்காக இந்த விளையாட்டுக்களை விளையாடி, அறிவை வளர்த்துக்கொள்ளலாம் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.




அந்தவகையில், http://www.nobelprize.org/educational/all_productions.html என்ற இத்தளத்திற்கு சென்று அறிவை வளர்க்கும் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டு அறிவை வளர்த்துக்கொள்ளலாம். ஒவ்வொரு விளையாட்டை ஆரம்பிக்கும் முன்னர் அந்த விளையாட்டுப் பற்றிய விதிமுறைகளையும் விபரங்களையும் இந்த இணையத்தளம் வழங்குகின்றது. அத்துடன், எந்த ஒரு விளையாட்டை எடுத்துக்கொண்டாலும் அதில் இருந்து அதிகப்படியான தகவல்களையும் புதுமையான பல விடயங்களையும் நாம் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.




அத்துடன், இங்கு விளையாட்டுகள் வடிவமைக்கப்பட்டிருக்கும் விதமும் சிறப்பாக இருக்கிறது என்பதோடு, விளையாட்டின் விதிமுறைகளைத் தெரிந்துகொண்டு விளையாடும்போது, அவை அறிவை வளர்க்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே, அறிவை வளர்த்துக்கொள்ள விரும்பும் அனைவரும் இங்கு சென்று பயன்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் காலணிகள்




கூகிள் நிறுவனம் கணினி தொடர்பான விற்பனை மற்றும் சேவைகளில் அதிநவீன வளர்ச்சியுடன் முதன்மை பெற்றுத் திகழ்கின்றது. அதற்கேற்ப, அவ்வப்போது நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய சாதனங்களை அறிமுகப்படுத்தி வருகின்றது. அந்த வரிசையில்தான் 'பேசும் காலணிகள்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்காக, 'அடிடாஸ்' நிறுவனத்தின் விளையாட்டுக் காலணிகளைத் தெரிவுசெய்து, அவற்றில் சிறிய கணினி, accelerometer, gyroscope, அழுத்தத்தைக் குறிக்கும் சென்சார்கள், ஒலிபெருக்கி மற்றும் புளூடூத் போன்றவற்றைப் பொருத்தியுள்ளது.



ஒருவர் இந்தக் காலணிகளை அணிந்துகொண்டால், அவர்கள் செய்துகொண்டிருப்பதை புளூடூத் மூலம் அவரின் தொலைபேசிக்கோ, ஒலிபெருக்கிமூலம் அவருக்கோ தகவல் பெறமுடியும். அத்துடன்,





பாதணியில் பொருத்தப்பட்டுள்ள கூறுகள், இந்த காலணிகளை அணிந்திருப்பவரின் நகர்வுகள் மற்றும் நிலைகள் குறித்து கம்பியில்லாத் தொழில்நுட்பத்தின்மூலம் இணையத்தினூடாக, தொடர்புகளை மேற்கொள்ளவும் உதவுகிறது.

## கோப்புக்களின் திகதிகளை மாற்றியமைப்பதற்கு....

கணினியில் கோப்புக்கள் புதிதாக உருவாக்கப்படும்போது, அந்தக் கோப்புக்கள் உருவாக்கப்பட்ட திகதிகளும் இயல்பாகவே சேமிக்கப்படுகின்றன.

இவ்வாறு சேமிக்கப்படும் திகதிகளை விருப்பத்திற்கு ஏற்றாற்போல் மாற்றியமைப்பது இலகுவான காரியமன்று. எனினும்,அந்த செயற்பாட்டை செய்வதற்கு BulkFileChanger எனும் மென்பொருள் உதவுகின்றது.



விண்டோஸ் இயங்குதளங்களில் செயற்படக்கூடிய இம்மென்பொருளை கணினியில் நிறுவி இயக்கிய பின்னர், திகதிகள் மாற்றப்பட வேண்டிய கோப்புக்களை இம்மென்பொருளினுள் திறந்து, நாம் வழங்க இருக்கும் திகதியைக் கொடுத்து மாற்றியமைக்க முடியும்.






# Google Reader விரைவில் நிறுத்தப்படும்?




இணைய வாசிகளுக்கு பல சேவைகளை அறிமுகப் படுத்தி வரும் கூகிள் நிறுவனம், தனது சேவைகளில் சிலவற்றை அவ்வப்போது 'Spring Cleaning' என்ற பெயரில் நிறுத்திவிடும்.

கடந்த வருடம்கூட Google Talk Chatback, iGoogle, Google Video போன்றவற்றை நிறுத்தப் போவதாக அறிவித்தது. தற்போது மேலும் சில வசதிகளை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளது. அதில் முக்கியமானதாக கூகிள் ரீடர் (Google Reader) அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, Apps Script, Google Building Maker, Google Cloud Connect, Google Voice App for Blackberry, Snapseed Desktop for Macintosh and Windows போன்ற சேவைகளையும் நிறுத்தப் போவதாக கூகிள் அறிவித்துள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கூகிள் ரீடர், நமக்கு விருப்பமான தளங்களை ஒரே இடத்தில் படிப்பதற்குப் பயன்படுகிறது. இதனை அதிகமானவர்கள் பயன்படுத்தியிருந்தாலும், அதன் பயன்பாடு கடந்த சில வருடங்களாக குறைந்துவிட்டது என்றும், அதனால்தான் அதனை நிறுத்தப் போவதாகவும் கூகிள் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் ஜூலை மாதம் தொடக்கம் Google Reader இயங்காது என அறியக்கிடைக்கின்றது.

# vimeo வழங்கும் புதிய வசதி



Online இல் வீடியோ கோப்புக்களை பகிருதல் மற்றும் தரவேற்றம்(upload) செய்யும் சேவையை வழங்கிவரும் தளங்களில் vimeo.com தளமும் ஒன்றாகும்.

இத்தளமானது, தனது பயனர்களைக் கவரும் விதமாக அந்தத் தளத்தில் பகிரப்படும் அல்லது தரவேற்றப்படும் வீடியோ கோப்புக்களைப் பார்வையிடும்போது, அவற்றினை விசேட Visual Effects களின் உதவியுடன் பார்வையிடுவதற்கான வசதியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், Audio க்களுக்குரிய Effects உம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென 500 இற்கும் மேற்பட்ட Visual Effects கள் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது... சிறுவர்களுக்கு மட்டும்!







KidZui: The Web Browser for Kids

நீங்கள் இணையத்தில் உலாவ இணைய உலாவி (Internet Browser) அவசியம் என்பதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். அந்தவகையில், கூகிள் க்ரோம், ஃபயர் ஃபொக்ஸ், இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் ஆகிய உலாவிகள் தற்போது பயன்பாட்டில் உள்ள பிரபலமான உலாவிகளாகும். ஆனால், இவை அனைவராலும் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றன. இந்நிலையில்தான் சிறுவர்களுக்கென்றே பிரத்தியேகமாக இணைய உலாவி யொன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அதன் பெயர் 'kidzui' என்பதாகும்.

எப்போதுமே சிறுவர்களின் உலகம் பெரியவர்களிடமிருந்து வேறுபட்டது; தனித்துவமானது. அதேபோல் இணையத்திலும் சிறுவர்களுக்கென்று தனி உலகம் இருக்கவே செய்கின்றது. ஆக, அந்த சிறுவர் இணைய உலகில் உலாவுவதற்கான வழியாகவே இந்த 'kidzui' அமைந்துள்ளது. அதாவது சிறுவர்களுக்கான இணையத்தளங்கள், சிறுவர்களுக்கான வீடியோக்கள், சிறுவர்களுக்கான கேம்கள் என எல்லாமே சிறுவர்களுக்கென்றே தனித்துவமான விடயங்களே இங்கு உள்ளன.

இந்த உலாவி குறிப்பாக, சிறுவர்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்டதாகும். பொதுவாக, 'இணையம்' என்பதை 'தகவல் கடல்' என்று கூறலாம். அதில் எண்ணற்ற விடயங்கள் இருக்கின்றன. அங்கு சிறுவர்களுக்கு ஆபத்தான-சிறுவர்கள் பார்க்கக்கூடாத தளங்களும் இருக்கின்றன. இத்தகைய ஆபத்துகளில் தமது பிள்ளைகள் சிக்கிக்கொள்ளக்கூடாது என்றே பெற்றோர்கள் விரும்புவார்கள். எனவே, அந்த எதிர்பார்ப்பினைத் தான் kidzui உலாவி செய்கிறது.



இந்த உலாவியைப் பயன்படுத்தும்போது, சிறுவர்களுக்கென்று தெரிவுசெய்யப்பட்ட இணையத்தளங்கள் மற்றும் வீடியோக்களே இங்கு தோன்றும்.இதில் தேடல்களை மேற்கொள்ளும்போதுகூட சிறுவர்களுக்கான தகவல்களே தோன்றும். அத்துடன், சிறுவர்களுக்கு ஏற்ற தேடல் குறிப்புகள் வழங்கப்படுவதோடு, புகைப்படக் குறிப்புகளையும் காணலாம். அவ்வாறே, கல்வி சார்ந்த வீடியோக்களையும் பார்க்கலாம். பாதுகாப்பான கேம்களையும் விளையாடி மகிழலாம். இதில் பார்க்கும் இணையத் தளங்களை புக்மார்க் செய்து பின்னர் பார்த்துக் கொள்ளலாம். அத்துடன், உலாவியின் முகப்புப் பக்கமும் புகைப்படங்கள், எனிமேஷன் என்று எப்போதுமே வண்ணமயமாகவே இருக்கும்.


இப்படி இந்த உலாவியில் எல்லாமே சிறுவர்களுக்கானதாக இருப்பதால், இது பாதுகாப்பானதாகவும் இருக்கிறது. இலவசமாகக் கிடைக்கும் இந்த உலாவியை www.kidzui.com எனும் இணையத்தளத்திற்கு சென்று தரவிறக்கிக் கொள்ளலாம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தளிர்கரம்




இங்குள்ள படங்களுக்கு ஏற்ப, பொருத்தமாக வண்ணமிடுக.





இந்த 10 அம்புகளுள் எந்த அம்பினூடாக A, B, C, D, E, F இவற்றில் உள்ள ஏதேனும் ஒரு மையப்பகுதியை சரியாக குறிபார்க்கலாம் என்பதைக் கண்டறிக.













நிறந்தீட்டப்பட்டு, பூரணப்படுத்தப்பட்டுள்ள உருக்களைப் பார்த்து, இங்கு புள்ளிக்கோட்டில் தரப்பட்டுள்ளவற்றை இலக்க அடிப்படையில் இணைத்து நிறந்தீட்டுக.

# தொடர்பாடல் அடிப்படைகள்/தொடர்பாடல் பண்புக்கூறுகள்

**ஊடக பாடநெறி 26**


தொடர்பாடல் என்பது ஒரு செயன்முறைத் தன்மையைக் குறிக்கின்றது. செயன்முறை என்பது பல்வேறுபட்ட அடிப்படைக் கூறுகளின் செயன்முனைப்புக்களுடன் தொடர்புபட்டு முழுமையான நிலையை அடைகின்றது. அந்தவகையில், தொடர்பாடல் செயன்முறை அடிப்படைகள்; தகவல், அனுப்புபவர், பெறுபவர் என்ற மூன்று கூறுகளை பிரதான பண்புக்கூறுகளாக உள்ளடக்கி இருப்பதை உணரமுடிகின்றது. தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணங்களை சுட்டிக்காட்டிய அதாவது, தொடர்பாடல் மாதிரிகளை அடிப்படையாகக்கொண்டு தொடர்பாடல் எண்ணக்கருக்களை முன்வைத்த தொடர்பியலாளர்களின் சிந்தனை உள்ளடக்கங்கள்






தொடர்பாடல் பற்றிய அடிப்படைகளையும், பண்புக்கூறுகளையும் மேலும் தெளிவாக்குவனவாக அமைகின்றன. தொடர்பியலின் செயற்பாட்டை விளக்குவதற்கும் விளங்கிக்கொள்வதற்கும் தொடர்பியல் செயன்முறைகளை பல கூறுகளாக நோக்க வேண்டியுள்ளது.

தொடர்பாடல் செயன்முறை தொடர் ஒழுங்காக இடம்பெறுவதற்கு தொடர்பாடல் அடிப்படைகள் அவசியமாகின்றன. தொடர்பாடல் சக்கரமாக தொழிற்படுவதற்கு ஆதாரமாகின்றன. தொடர்பாடல் அடிப்படைகளை விளங்கிக்கொள்வதற்கு தொடர்பாடல் மாதிரிகள் உறுதுணையாக அமைகின்றன. கீழ்காணும்'லாஸ்வெல் மாதிரி' வரிப்படமானது, தொடர்பாடல் செயன்முறை இடம்பெறுவதற்கு அடிப்படையான ஆக்கக்கூறுகளை காட்டுவதாகவும் தொடர்பின் பண்புக்கூறுகளை விளக்குவதாகவும் அமைகின்றது. தொடர்பாடல் செயன்முறை பற்றியும், தொடர்பாடல் எண்ணக்கரு பற்றிய விளக்கநிலையை அளிப்பதில் 'லாஸ்வெல் மாதிரி' முதன்மையானதாக அமைகின்றது. தொடர்பியல் செயற்பாட்டை எளிதாக விளங்கிக்கொள்ளவும், கூறுகளை இனங்கண்டு கொள்ளவும் இவரது மாதிரி விளக்கமளிக்கின்றது.




(லாஸ்வெல் மாதிரி - 1948)

- தொடர்பாடல் செயல் ஒழுங்கின் ஆரம்பநிலையில் காணப்படும் இவர் தகவலை வெளிக்கொணர்பவராக தொழிற்படுகின்றார்.
- செய்தியை அனுப்புகின்ற முதல் கர்த்தாவாகக் காணப்படுகின்றார். செய்தியை குறிப்பிட்ட நோக்கத்துடன் முன்வைப்பவர்.
- தகவல் அனுப்புபவர் தோற்றுவாய் (Source) அல்லது (Ecorder) அனுப்புநர் என்று அழைக்கப்படுகின்றார்.

(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில், இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

අම්මා: **රාණි! නැගිටින්න දුව, වෙලා ගිහිල්ලා.**
ராணி! நெகிடின்ன துவ, வெலா கிஹில்லா.
அம்மா: **ராணி! எழும்புங்கள் மகள், நேரம் ஆயிற்று.**

**ඉස්කෝලේ යන්න ඕනේ.**
இஸ்கோலே யன்ன ஓனே.
**பாடசாலைக்குப் போக வேண்டும்.**

රාණි: **දැන් වෙලාව කීයද අම්මේ?**
தென் வெலாவ கீயத அம்மே?
ராணி: **இப்போது நேரம் என்ன அம்மா?**

අම්මා: **දැන් වෙලාව උදේ හතයි.**
தென் வெலாவ உதே ஹதய்.
அம்மா: **இப்போது நேரம் காலை ஏழு மணி.**

**ගිහින් මුහුණ කට සෝදගෙන එන්න.**
கிஹின் முஹுண கட்ட சோதகென என்ன.
**போய் முகம் கை-கால் கழுவிக்கொண்டு வாருங்கள்.**

**ராணி முகம் கை-கால் கழுவிக்கொண்டு வந்த பின்னர்...**

අම්මා: **රාණි මේ කිරි ටික බොන්න.**
ராணி மே கிரி டிக பொன்ன.
அம்மா: **ராணி இந்தப் பாலைக் குடியுங்கள்.**

රාණි: **අද උදේ කෑම මොනවද අම්මේ?**
அத உதே கேம மொனவத அம்மே?
ராணி: **இன்று காலைச் சாப்பாடு என்ன அம்மா?**

අම්මා: **කිරිබතුයි උම්බලකඩ සම්බෝලයි.**
கிரிபதுய் உம்பலகட சம்போலய்.
அம்மா: **பாற்சோறும் மாசிச் சம்பலும்.**

රාණි: **ගෙදර මොනව හරි විශේෂයක්ද අම්මේ?**
கெதற மொனவ ஹரி விஷேசயக்த அம்மே?
ராணி: **வீட்டில் ஏதாவது விஷேடமா அம்மா?**

අම්මා: **අද තාත්තාගේ උපන් දිනය.**
அத தாத்தாகே உபன் தினய.
அம்மா: **இன்று அப்பாவின் பிறந்தநாள்.**

රාණි: **අපට කේක් ඕනේ අම්මේ.**
அபட்ட கேக் ஓனே அம்மே.
ராணி: **எங்களுக்குக் கேக் வேண்டும் அம்மா.**

අම්මා: **තාත්තා හවසට ගෙනෙයි.**
தாத்தா ஹவஸட்ட கெனெய்.
அம்மா: **அப்பா பின்னேரம் கொண்டு வருவார்.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. எழும்புங்கள் மகள்.
.................................................................
ii. காலை ஏழு மணி.
.................................................................
iii. அப்பாவின் பிறந்தநாள்.
.................................................................






**Have been** அல்லது **Has been** எனும் கூட்டு வினைச்சொல்லைக் (Compound Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களை, உடன்பாடு நிலையில் இருந்து வினா நிலை வாக்கியங்களாக பின்வருமாறு மாற்றியமைக்கலாம்.

(அ) நீ இரண்டு தடவைகள் அமெரிக்காவுக்கு போயிருந்துள்ளாய்.
You have been to America twice.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) நீ அமெரிக்காவுக்கு போயிருந்துள்ளாயா?
Have you been to America?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(இ) நீ எப்போதாயினும் அமெரிக்காவுக்குப் போயிருந்துள்ளாயா?
Have you ever been to America?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஈ) அவர்கள் மூன்று தடவைகள் இங்கிலாந்துக்குப் போயிருந்துள்ளனர்.
They have been to England thrice.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(உ) அவர்கள் இங்கிலாந்துக்குப் போயிருந்தார்களா?
Have they been to England?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஊ) அவர்கள் எப்போதாவது இங்கிலாந்துக்குப் போயிருந்துள்ளனரா?
Have they ever been to England?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(எ) நீ இரண்டு வருடங்களாக மலேசியாவில் இருந்துள்ளாய்.
(வசித்துள்ளாய் எனவும் குறிப்பிடலாம்)
You have been in Malaysia for two years.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஏ) நீ மலேசியாவில் இருந்துள்ளாயா? (வசித்துள்ளாயா?)
Have you been in Malaysia?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(ஐ) அவர்கள் மூன்று வருடங்களாக கனடாவில் இருந்துள்ளார்கள்.
(வசித்துள்ளார்கள் எனவும் கருதலாம்)
They have been in Canada for three years.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஒ) அவர்கள் கனடாவில் இருந்துள்ளார்களா? (வசித்துள்ளார்களா?)
Have they been in Canada?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(அ) அவன் இரண்டு தடவைகள் இந்தியாவுக்குப் போயிருந்துள்ளான்.
He has been to India twice.
(உடன்பாடு வாக்கியம் -Affirmative Sentence)

(ஆ) அவன் இந்தியாவுக்குப் போயிருந்துள்ளானா?
Has he been to India?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(இ) அவன் எப்போதாவது இந்தியாவுக்குப் போயிருந்துள்ளானா?
Has he ever been to India?
(வினா வாக்கியம் -Interrogative Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேகம்

பார் முழுவதும் மேகம்
பரந்திருக்கிறதே!
பரந்த மனதிற்கு
உதாரணமாய் அது அமைகிறதே!

அமுதமாய் மழையினை
அகிலத்தில் உள்ளோருக்கு
அளவில்லாத அருட்கொடையாய்
அள்ளி அளிக்கிறதே!

பகலினில் சூரியனுக்கும்
இரவினில் சந்திரனுக்கும்
விண்மீன்கள் விளையாடிடவும்
இடமளிக்கிறதே அழகிய வானம்!

ஏ.எல்.நஜீம்,
மார்கஸ் அந்நூர் அராபிக் கலாபீடம்,
ஹிஜ்ரா நகர்,
வாழைச்சேனை.



# பற்கள் பற்றி தெரிந்து கொள்வோம்

மனிதனின் பாற்பற்கள் - 20
மனிதனின் நிரந்தரப் பற்கள் - 32
எலி - 16
பன்றி - 44
நாய் - 42

★ முதலாவது பாற்பல் குழந்தையின் 6 மாதத்தில் வெளிவரத் தொடங்கி, 24 வயதளவில் 32 பற்களும் வெளிக்கொணரப்படுகின்றன.

எப்.அப்லா,
அந்நூர் மத்.கல்., பாணகமுவ.

# பிராணிகள் எழுப்பும் ஒலிகள்

01. தேனீ - ரீங்காரம் இடும்
02. குதிரை - கனைக்கும்
03. யானை - பிளிறும்
04. ஈக்கள் - இரையும்
05. கோழி - கொக்கரிக்கும்
06. நரி - ஊளையிடும்
07. கருங்குயில் - பாடும்
08. பன்றி - உறுமும்
09. அன்னம் - அமும்
10. ஓநாய் - ஊளையிடும்.

எஸ்.தம்மிகா, காவத்தை.

# சதுரங்கம்



சதுரங்கம் எனப்படுவது ஆங்கிலத்தில் 'செஸ்' என்று அழைக்கப்படுகின்றது. இது ஒரு வகையான அரங்க ஆட்டமாகும். சதுரங்க விளையாட்டு இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டது. இது மூளைக்கு வேலை கொடுக்கும் ஒருவகையான விளையாட்டாக இருக்கிறது. ஆனால், சிலர் இந்த விளையாட்டு, சீனாவில் இருந்தே இந்தியாவிற்கு அறிமுகம் செய்யப்பட்டது என்றும் கூறுகின்றனர். 1850 ஆம் ஆண்டுகளில் நவீன சதுரங்கப் போட்டி லண்டனில் நடைபெற்றது. 1972 இன் பின்னரே, சதுரங்க விளையாட்டு மிகவும் பிரசித்தி பெற்றதாகக் கருதப்படுகின்றது.

கே.எஸ்.சுஜன், ஹில்பர்ன் சர்வதேச பாடசாலை.

# நாய்க்கு கிடைத்த வரம்






பிறந்தவுடன் தனித்து விடப்பட்ட அப்பாவி நாய்க்குட்டி ஒன்று எப்படியோ காட்டுக்குள் ஓடி வந்துவிட்டது. காட்டினுள் அகப்பட்டதை உண்டு அது பெரிதாகியது.

ஒருநாள் அந்த நாய் இருந்த இடத்தின் வழியாக மகா ரிஷி ஒருவர் வந்தார். அவர் மிகவும் நல்லவர். சிறந்த பக்திமான். அளவில்லாத சக்திகளைக் கொண்டவர். அவர் அந்தக் காட்டு வழியே நடந்து வருகையில் காலில் அடிபட்டு இரத்தம் கொட்டத் தொடங்கியது. இதனைக்கண்ட நாய் ஓடிச் சென்று சில பச்சிலைகளைப் பறித்து வந்து, அதனைப் பிழிந்து காயத்தில் இடுமாறு கூறியது. அந்த ரிஷி நினைத்திருந்தால் அக்கணமே தமது சக்தியால் காயம் மறைந்து விடும்படி செய்திருக்கலாம். ஆனால், நாய் என்ன செய்யப்போகின்றது என்பதை அறிந்துகொள்வதற்காக அவர் பேசாமல் இருந்துவிட்டார். அத்துடன், அவருக்கு அனைத்து ஜீவராசிகளினது மொழியும் தெரியும்.


நாயின் அன்பைப் பார்த்து வியந்த அவர், ''நான் உனக்கொரு மந்திரம் சொல்வேன். நீ அதனை தொடர்ந்து 40 நாட்கள் கூறி வந்தால் நீ விரும்பிய வடிவம் உனக்குக் கிடைக்கும். நல்ல வழியில் அதனைப் பயன்படுத்து வெற்றியுடன் வாழ்'' என்று கூறிச் சென்றார். இதனை, ஒரு காகம் மரக்கிளையில் அமர்ந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தது. நாயும் 40 நாட்கள் அந்த மந்திரத்தைக் கூறியது. நாய்க்கு வரமும் கிடைத்தது. இதனால், அந்த நாய் ஒரு கிளியாக மாற வேண்டுமென விரும்பியது. உடனே அது கிளியாக மாறவே பறந்து சென்று சில பழங்களைக் கொத்தித் தின்று பசியாறியது. பின்னர் அது காகமாக மாறி பசுவின் மீது அமர்ந்தது. பின் புலியாக மாறி அங்குள்ள மிருகங்களை எல்லாம் அடித்துத் தின்றது. கழுகாக மாறிப் பட்சிகளை எல்லாம் விரட்டியது. பாம்பாக மாறி முட்டைகளைக் குடித்தது. இவ்வாறு பல கொடுமைகளை அது செய்தது. நாயின் அட்டகாசங்களைப் பார்த்துக்கொண்டிருந்த காகம் சுவாமியைத் தரிசித்து நடந்தவற்றைக் கூறியது. அனைத்தையும் அறிந்த மகா ரிஷி நாயை வேறு எந்த உருவமும் எடுக்க முடியாதவாறு நாயாகவே மாற்றிவிட்டார். தனது அட்டூழியங்களால் மந்திரம் வலிமையற்றுப் போனது என்றெண்ணிய நாய் தனது முட்டாள்தனத்தை எண்ணி நொந்து கொண்டது.

எஸ்.கிருஷ்ணவேணி,
விபுலானந்தாக் கல்லூரி.

# மின்சார மீன்



சாதாரண மீன்களைப் போன்ற உடல் அமைப்புக் கொண்ட 'மின்சார ஈல்' (Electric eel) மீன்கள் ஆபத்தான ஒருவகை மீன் இனமாகும். தென் அமெரிக்காவில் உள்ள அமேசன் மற்றும் அஜ்னிகோ ஆறுகளின் கரைகளில் வாழும் இந்த மீனை, 'ப்ரசீலியன் எலெக்ட்ரிக் ஈல்' என்று கூறுகிறார்கள். இதன் நீளம் 1.8 மீற்றர். இதன் வாலில் மின்சார உற்பத்திக்கான உறுப்புகள் அமைந்துள்ளன. இதிலிருந்து உண்டாகும் மின்சாரம் குதிரையளவு பெரிய மிருகங்களைக்கூட கீழே சாய்த்துவிடும் வலிமைமிக்கது. இந்த மீன் 400 வோல்ட் ஒரு அம்பியர் அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடியது. ஒரு சில மீன்கள் 650 வோல்ட் அளவு வரை மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவை.



எம்.என்.எம்.இம்ரான்,
அஸ்ஹர் மத்திய கல்லூரி, அக்குறனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனியின் ஒருநாள் ஜனாதிபதி கொயபல்ஸ்

## ஹிட்லரின் பணிப்பெண் ஃப்ளஜல் தரும் திடுக்கிடும் தகவல்!



கொயபல்ஸ்

**1928** ஆம் ஆண்டு ஹிட்லர் தனது நாசிக் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளராக கொயபல்ஸ் (Goebbels) என்பவரை நியமித்தார்.



பிள்ளைகளுடன் கொயபல்ஸ்



இறந்த நிலையில் கொயபல்ஸின் ஆறு பிள்ளைகள்



தாதி எர்னா ஃப்ளஜல்

உலகில் அதிகமாகப் பொய் சொன்னவர் என்ற இடத்தைப் பிடித்துக்கொண்ட கொயபல்ஸிடம் சில வித்தியாசமான குணங்கள் காணப்பட்டன. பிற்காலத்தில் ஹிட்லருக்கு மிகவும் நெருக்கமானவராகக் காணப்பட்ட இவர், 1925 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஹிட்லரைச் சந்தித்துள்ளார்.

கொயபல்ஸ் வரலாற்றாசிரியர்களால் மிகவும் விசித்திரமான தோற்றத்தைக் கொண்டவராக வர்ணிக்கப்படுகின்றார். ஆனால், அவரது பேச்சைக் கேட்டதும் மக்கள் தங்களை மறந்து அவரது பேச்சுக்குள் சங்கமமாகி விடுவதாக வரலாற்றுக் குறிப்புகளில் அறியக் கிடைக்கின்றது.

அதற்குக் காரணம், அவரது நாடகத் தன்மை கொண்ட பேச்சுத் திறன் எனலாம். எனினும், கொயபல்ஸிடமிருந்த நாடகத்தன்மையான பேச்சுத் திறன் ஹிட்லரை கொயபல்ஸிடம் நெருங்க வைத்திருக்கக் கூடுமென வரலாற்றாசிரியர்கள் நம்புகின்றனர்.

இரண்டாம் உலக யுத்தகாலத்தில், அவர் பரப்பிய கருத்துக்கள் பொய்யானவையாக இருந்தபோதிலும்,பரப்பிய முறைகள் வலிமையானவைகளாக இருந்துள்ளன.

1945 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி ஹிட்லர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவுக்கு வரும் தருவாயிலேயே, இது நிகழ்ந்தது. ஜேர்மன் நாட்டின் அடுத்த தலைவராக கொயபல்ஸை நியமித்து விட்டே, ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

ஹிட்லர் தற்கொலை செய்துகொள்வதற்கு, சில நிமிடங்களுக்கு முன்பு வரை கூட, ஹிட்லரின் பணிப் பெண்ணாகக் கடமைபுரிந்தவர் எர்னா ஃப்ளஜல் என்பவராவார். பெர்லின் பல்கலைக்கழக க்ளினிக்கில் தாதியாகப் பணிபுரிந்த இவர், அங்கிருந்து ஹிட்லரின் பதுங்கு குழிக்கு க்ளினிக் மாற்றப்பட்ட போது, அவரும் அழைத்து வரப் பட்டார். அவருக்குத் துணையாக, அவருடன் இன்னொரு தாதியும் பணிபுரிந்துள்ளார். ஹிட்லரின் பதுங்கு குழி நிலத்துக்கடியில் அழகாக வடிவமைக்கப்பட்ட கட்டடமொன்றாகவே காணப்பட்டதாக தாதி ஃப்ளஜல் குறிப்பிடுகின்றார்.

ஹிட்லரின் மரணத்தின் பின் கொயபல்ஸின் மனைவியான மெக்டாவை, பதுங்கு குழியில் சந்தித்துள்ளார் ஃப்ளஜல். கொயபல்ஸின் ஆறு பிள்ளைகளும் கொயபல்ஸின் மனைவியான மெக்டாவால் சயனைட் கொடுத்துக் கொல்லப்பட்டனர் என்ற தகவலையும் இவர் வெளியிட்டுள்ளார். ஃப்ளஜல், பிள்ளைகளைப் பதுங்கு குழிக்கு வெளியே கொண்டு சென்று விட்டு விடுவோம் என்று கொயபல்ஸிடம் தான் மன்றாடிய போதும் அவர் அதனை மறுத்துவிட்டதாகவும் குறிப்பிடுகின்றார்.



சர்வாதிகாரி ஹிட்லர்

தமது பிள்ளைகளின் மரணத்தின் பின்னர் கொயபல்ஸ் தம்பதியினர் மே மாதம் முதலாம் திகதி தற்கொலை செய்துகொண்டனர். சர்வதிகாரி ஹிட்லரின் நியமனத்துக்கு அமைய, ஒரே ஒருநாள் மாத்திரம் ஜேர்மனியின் தலைமைப் பதவியை வகித்தவர் என்ற பெருமையை கொயபல்ஸ் பெற்றுக்கொண்டார்.

**-செம்மைத்துளியான்**

'விஜய்' யின் சைக்கிள் போட்டி வெற்றியாளர்களுள் ஒருவரான கண்டி, கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த எஸ்.எம். ஸாகித் தமக்குரிய சைக்கிளை விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் கண்டிக் கிளையின் நுகர்வோர் சேவை உதவியாளர் விதுஷிகா உடதென்ன விடமிருந்து பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.




விஜய் உடன் 'TOP NEWS' வழங்கும் 2 8GB பென் ட்றைவ் பரிசுகள்!!!




இம்மாதத்திற்கான கேள்வி

கேள்வி:- மனிதர்களில் மரபணு சிகிச்சை சாத்தியமானது என்பதைக் கண்டறிந்தவர் யார்?

இக்கேள்விக்கான விடையினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் Dialog தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

பெப்ரவரி மாதத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து கூப்பன்களையும் இணைத்து கேள்விக்கான விடையையும் குறிப்பிட்டு தபாலிடவும்.

'விஜய்' பத்திரிகையில் வழங்கப்பட்டுள்ள கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் 2 நபர்களுக்கு 8GB பென் ட்றைவ் ஒன்று பரிசாக வழங்கப்படும்.

பெப்ரவரி மாதம் கேட்கப்பட்ட கேள்விக்கான விடை: சாரதா
'பென் ட்றைவ்' பரிசு பெறும் இருவர்

★ எஸ்.ரக்ஸான், நானாட்டான், மன்னார்
★ தி.சதானந்தன், லூர்து மாவத்தை, சிலாபம்.

முகவரி:
Pen drive போட்டி,
'விஜய்'
த.பெ.இல.2037
கொழும்பு.

அனுப்பும் முறை:




கூப்பன் - மார்ச்
(இந்த மாதத்திற்கான அனைத்து கூப்பன்களையும் சேகரித்து ஒன்றாக அனுப்பவும்)


இல - 04

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்தமற்ற உருவில் X அடையாளமிடுக

2









தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.04.03 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 410**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## கூட்டுக (விடையை இலக்கத்தில் எழுதுக)

3



## குறுக்கெழுத்துப் போட்டி இல. 26



**மேலிருந்து கீழ்**

01. தாமரை.
02. பழவகை ஒன்று.
04. செல்வம். (தலைகீழ்)
06. 'பாட்டன்' என்பதன் எதிர்ப்பாற் சொல்.
07. நதி உற்பத்தியாகும் இடம்.
10. பொய்கை.
11. காலின் கீழ்ப்பகுதி. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

01. இனிப்புப் பண்டம் ஒன்று.
03. நிலா.
05. பாரதியார் இவர்களுக்காகவும் பாட்டுக்கள் எழுதியுள்ளார்.
08. சிங்கம். (மாறியுள்ளது)
09. சிரசு. (மாறியுள்ளது)
11. வெற்றிக்குக் கிடைப்பது.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.25 விடைகள்




## அறிவுக்கு விருந்து - 407 விடைகள்

**போட்டி: 02**



**போட்டி: 03**




**போட்டி: 04**

(A) 1. தமையன்
2. கம்பீரம்
3. புதையல்
4. மரவள்ளிக்கிழங்கு

(B) 1. பலா - மூசு
2. மீன் - குஞ்சு
3. பனை - நுங்கு

**போட்டி: 05**

1. 18 - XVIII
2. 53 - LIII
3. 30 - XXX
4. 214 - CCXIV
5. 67 - LXVII

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 407 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
கே.அஜீந்திரா, நொச்சிமுனை, மட்டக்களப்பு.

**போட்டி: 02**
பஸ்ஹறா முனவ்வர், வியாங்கல்லை, அகலவத்தை.

**போட்டி: 03**
எம்.நுஹறாஸ், தும்மலதெனிய, வறக்காப்பொளை.

**போட்டி: 04**
எஃப்.மனால், சுங்காவில, பொலன்னறுவை.

**போட்டி: 05**
சி.சங்கீர்த்தன், மல்லாகம், யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- எம்.ஷாலினி, ஹாலி-எல.
- நுஸ்ரத் நஸார்தீன், தர்காநகர்.
- எஃப்.சஸ்னா, மாத்தளை.
- எம். அஸாட், இப்பாகமுவ.
- ப.ரஜீவ், நீர்வேலி.
- டி.செந்தூரன், பருத்தித்துறை.
- ஷகீர் அஹமட், அக்குறனை.
- க.கிஷோகரன், தெஹிவளை.
- கே.ஹரிப்பிரசாத், மட்டக்களப்பு.
- எம்.பர்ஹான், தர்கா நகர்.

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து சரியான பழமொழிகளை அமைக்க

5

1. பணம்/ உதவுமா?/ கனவில் கண்ட/ செலவிற்கு
..................................................
2. அறியாதவன்/ அறியான்/சற்றும்/ சைகை
..................................................
3. குழியாக்கும்/ தண்ணீர்/ மெல்லப்/கல்லையும்/ பாயும்
..................................................
4. சும்மா/ கடன்/ அள்ளிக் கொடுத்தால்/ அளந்து கொடுத்தால்
..................................................

## வட்டத்தினுள் இருக்கும் எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க

4




## வழிகாட்டுங்கள்

1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலை விகாரை வீதியைச் சேர்ந்த கமலநாதன்-ஜெகதீஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வன் உதர்ஷன், தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளை 29.03.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் மடத்தடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.



வவுனியா அகத்தியார் வீதியைச் சேர்ந்த அன்பழகன்-சுவிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் பகீரதன், தனது எட்டாவது பிறந்தநாளை 25.03.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் விநாயகரின் அருள்பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல்: சுஜானா)*



வெலிமடையைச் சேர்ந்த இஷாக்- சிபானி தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா இல்மா, தனது முதலாவது பிறந்தநாளை 23.03.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹல்வத்துரை தோட்டம் கீழ்பிரிவு இங்கிரியவைச் சேர்ந்த வனராஜா-ராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் கிஷான்கார்த்திக், தனது முதலாவது பிறந்தநாளை 19.03.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



நேகமையைச் சேர்ந்த சபீர் முஹம்மட்-பாத்திமா ஹனூசியா தம்பதியரின் செல்வப் புதல்வி ஷரபுல் ஹுஃபா, தனது முதலாவது பிறந்ததினத்தை 28.02.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.




ஹுரீமலுவ - ரம்புக்கனையைச் சேர்ந்த ஜலால்-நஸீஹா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா நஜ்லா, தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 31.03.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர், உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

# இலங்கையின் பிரசித்தி பெற்ற ஓவியர்கள் சிலர்...

ஆயுர்வேத வைத்தியர் சிரோ மெண்டிஸ் அவர்களின் புத்திரர்களில் ஒருவரான சோலியஸ் மெண்டிஸ், 1897 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் திகதி பிறந்தார். இவரின் முதலாவது ஓவியம் மாவில விகாரையில் வரையப்பட்டுள்ளது.

இவர் இந்தியாவில் 'நந்தலால் போஸ்' என்பவரிடம் ஓவியம் கற்றுக்கொண்டார். களனி விகாரையிலுள்ள ஓவியங்கள் சோலியஸ் மெண்டிஸ்ஸின் திறமையை எடுத்துக்காட்டுவதாகக் காணப்படுகின்றன. இலங்கையின் ஓவியக்கலை வரலாற்றில் கண்டிக் காலத்தின் பின்னர், இலங்கைக்கே உரிய தனிப்பண்புகளையுடைய





## சோலியஸ் மெண்டிஸ்



ஓவியங்களை இங்குதான் காணமுடியும். சோலியஸ் மெண்டிஸினால் வரையப்பட்ட மேலும் பல ஓவியங்களை மத்தேபொல விகாரை, ரணங்கல்ல விகாரை உட்பட, பல இடங்களில் காணலாம்.

சோலியஸ் மெண்டிஸ் இந்தியாவிலுள்ள பண்டைய ஓவியங்களை நன்கு ஆராய்ந்துள்ளதோடு, இலங்கையின் சீகிரியா, கண்டிக் கால ஓவியங்களையும் நன்கு ஆராய்ந்து, தனக்கென ஒரு தனித் தன்மையை வளர்த்துக்கொண்டார். ஓவியங்களில் இடத்திற்கு ஏற்றவாறு ஒளிப் பிரயோகம் (பிரகாசம், இருள்) காட்டுவது, மனித உருவங்களை மிகவும் துல்லியமாகவும் எடுப்பாகவும் வரைவது போன்ற தனிப் பண்புகளை இவரது ஓவியங்களில் காணலாம். இவரது ஓவியங்கள் ரேகைகளால் ஆனவை. இவர் ஜாதகக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. வரலாற்று சம்பவங்களைத் தெரிவுசெய்து மிகவும் அருமையாக வரைந்துள்ளார். அத்துடன், புத்தரின் வாழ்க்கையில் பல வரலாற்றுச் சம்பவங்களையும் ஓவியமாக வரைந்துள்ளார்.

(தொடரும்)

**- எஸ்.எல்.எம். மஹ்ரூஃப்**



பி.சத்தியராஜ்,
பூனாகலை த.ம.வித்., பண்டாரவளை.



க.எவான்,
புனித மிக்கேல் கல்., மட்டக்களப்பு.






ஜெ.அர்ச்சனா,
விபுலானந்தாக் கல்., வவுனியா.

திவேணி,
கொக்குவில் இந்.கல்., கொக்குவில்.





பு.சுதர்சன்,
சி.சி.தமிழ் ம.வித்., பலாங்கொடை.

ந-முஹம்மட் றிஸ்வின்,
அல்-அஷ்ரக் தே.பாட., நிந்தவூர்.





ஜெ.கிருஷிகன்,
யாழ். இந்துக் கல்., யாழ்ப்பாணம்.



எஃப்.ஸைபா,
அல்-அஸ்ஹர் மத்.கல்., திஹாரிய.



எஃப்.சுஹைனா,
பதுரியா மத்.கல்., மாவனல்லை.

ந.மதுறன்,
புதுக்குடியிருப்பு மத்.கல்.,
புதுக்குடியிருப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரதானியின் தந்திரோபாயம்

கண்டியின் பிரதானி, தனது கோரிக்கைகளை நிறைவேற்றாததால் மேஜர் டேவி மீது வைராக்கியம் கொண்டிருந்தார். ரகசியமாக ஜாவா படையினரை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி, ஆங்கிலேயரின் படையணிகள் பயணிக்கும் பாதைகளில் இடையூறுகளை விளைவிக்க ஆரம்பித்தார். கோட்டைகளுக்கு வழங்கும் வசதிகளைக் குறைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதனால், உணவும் குடிநீரும் குறைந்தது. சில தினங்களில் கோட்டையின் நிலை

எதிர்பாராத விதமாக மோசமடைந்தது. படையினர் பெரும் துயரமடைந்தனர். அதனை அறிந்துகொண்ட பிரதானி கண்டி மன்னரை கோட்டையைச் சுற்றி வளைக்கப் படையினரை அனுப்பும்படி வேண்டினார். ஆனால், இவற்றில் எதனையுமே தான் அறியாதது போலவும் காட்டிக்கொண்டார். அத்துடன், கண்டி மன்னன் டேவியின் கோட்டையைச் சுற்றி வளைத்து ஜூன் மாதம் 23 ஆம் திகதி கோட்டைமீது தாக்குதல் நடாத்தப் போவதாகவும் முன்கூட்டியே ஆங்கிலேயருக்கு தவறான அறிவித்தலைக் கொடுத்தார்.

ஆனால், இதற்கு மாறாக, ஜூன் 24 ஆம் திகதி கண்டிப்படைகள் கோட்டையைச் சுற்றி வளைத்துத் தாக்குதலை நடத்தின. கடுமையான யுத்தத்தின் பின் டேவி சில நிபந்தனைகளுடன் அடிபணிந்தார். அந்த நிபந்தனைகளுடன் கூடிய சமாதான ஒப்பந்தத்தை செய்வதிலும் அதனை தயாரிப்பதிலும் முன்னின்று நடவடிக்கைகளை மேற்கொண்டதும் பிரதானியே. படையணிகள் ஆயுதங்களுடன் முத்துசாமி இருக்கும் திருகோணமலைக்கு செல்ல வேண்டும். சகல பொருட்களையும், வெடிமருந்துகளையும், பீரங்கிகளையும் பிரதானியிடம் கையளிக்க வேண்டும். அதேவேளை, பிரதானியோ நோய்வாய்ப்பட்டுள்ள ஆங்கிலப் படையினருக்கு மருத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் அவர்கள் சுகமடைந்ததும் அவர்களை கொழும்பிற்கு அனுப்ப வேண்டும். போன்றனவே அந்த நிபந்தனைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானிலையை அடையாளமிடுவோம்

## வானிலையை அறிந்துகொள்ளல்

எமது பிரதேசத்தின் வானிலையை எம்மால் அளவிட முடியும். இதன்பொருட்டு அதிகாலையில் வானத்தின் தன்மை, மேகங்கள், பனி படர்ந்துள்ள விதம், காற்றின் தன்மை மற்றும் மழை, வெப்பம் என்பனவற்றைக் கொண்டு வானிலையை அறிந்துகொள்ளலாம். அவ்வாறே, கடலுக்கு அண்மையில் வாழும்போது கடல் அலைகளின் தன்மையைக்கொண்டு அன்றைய வானிலை பற்றி அறிந்துகொள்ளலாம்.

## வானத்தின் தன்மை

வானம் நீல நிறமாகக் காணப்படின், அன்றைய தினம் மழையற்ற நாளாகும். அவ்வாறே, இரவு வானில் சந்திரன், நட்சத்திரங்கள் என்பன தெளிவாகத் தெரியுமானால், அன்றைய தினம் தெளிவான வானிலை காணப்படும். வானத்தின் அதிஉயர் மட்டத்தில் காணப்படும் வெண்ணிற மான மேகம் மழையைத் தராது. அதற்குக் கீழுள்ள நடுத்தர மேகமும், கீழேயுள்ள மேகமுமே மழையைத் தரக்கூடியவை. வானம் இருண்ட மேகங்களைக்கொண்டு காணப்படின், அன்றைய தினமோ அல்லது அதற்கு அண்மித்த தினமோ மழை வரலாம் என்பதற்கான அறிகுறியாகும்.

இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும்போது, மிகவும் பாதுகாப்பான இடத்திலிருந்து வானத்தை நோக்கும்போது, மேகங்களுக்கிடையிலும் மேகத்திலிருந்து பூமிக்கும் பூமியி லிருந்து மேகத்திற்கும் இடி கடுமையாகப் பயணிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.

## வெப்பத்தை அளவிடுதல்

சுற்றாடலின் வெப்பத்தை அளவிடுவதற்கு வெப்பமானி தேவைப்படுகின்றது. அல்லது முதல் நாளை அண்மித்த வெப்பத்தை வானிலை அளவிடும் அட்டவணையில் குறித்துக் கொள்ளலாம்.

## காற்றின் திசையை அறிந்து கொள்ளல்

காற்று வீசும் திசை காலத்திற்குக் காலம் வேறுபடுகின்றது. இது முக்கியமான வானிலை அளவீடாகும். காற்றுமானியின் துணையுடன் காற்று வீசும் திசையை அறிந்துகொள்ள முடியும். இதற்கென மரஞ்செடிகள் இல்லாத நன்கு காற்று வீசும் வெறும் தரையைத் தெரிவுசெய்து கொள்ளவும். அதில் குறிப்பிட்ட இடத்தில் சிறிய தடி ஒன்றினை நாட்டி சூரியன் உதிக்கும் திசை கிழக்கு திசை எனக்கொண்டு தடியை நாட்டிய இடத்தில் எட்டுத் திசைகளையும் குறிக்க வும். அதன்பின்னர், சிறு குழாய் ஒன்றினைப் பொருத்தி, ஒரு மூலையில் கோழி இறகைக் குண்டூசியின் மூலம் தக்க வைக்கவும். பின்னர் இறக்கையுடனான கீழ்க் குழாயின் சமனான புள்ளியில் அது அங்குமிங்கும் அசையும் வண்ணம் ஆணியொன்றினைப் பொருத்தவும். காற்று வீசும்போது, இறகின் அடிப்பகுதி அசையும். இறகின் எதிர்ப்பக்கக் குழாயின் அடிப்பகுதி அமைந்துள்ள திசை காற்று வீசும் திசையாகும்.

## காற்றின் வேகத்தை அறிதல்

மரம், செடிகள் அசைவதைக்கொண்டும், அடுப்பின் புகை மேலெழும்புதலைக் கொண்டும் காற்றின் வேகத்தை அறிந்துகொள்ளமுடியும்.

காற்றின் வேகம் குறையும்போது நிகழ்வன;

- மரம், செடிகளின் அசைவு மந்தமாக இருக்கும்.
- நெருப்பின் புகை மெதுவாகவே எழும்பும்.
- கடல் அலைகள் குறையும்.

காற்றின் தன்மையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ. மென்மையான காற்று

★ மரம், செடிகள் அசைவதில்லை.
★ புகை மெதுவாக மேலெழும்பும்.
★ கடல் அலைகள் மெதுவாக வீசும்.
★ காற்றின் வேகம் மணித்தியாலம் ஒன்றிற்கு 2-6 கிலோமீற்றர் வரையில் இருக்கும்.

ஆ. நடுத்தரமான காற்று

★ மரம், செடிகள் 'சரசர' என்ற சத்தத்துடன் அசையும்.
★ புகை ஓரளவு பக்கவாட்டிற்குச் செல்லும்.
★ கடலில் சிறிய அலைகள் தோன்றும்.
★ கொடி மற்றும் தொங்கவிடப்பட்டுள்ள பொருட்கள் சிறிதளவு அசையும்.
★ காற்றின் வேகம் மணித்தியாலம் ஒன்றிற்கு 7-11 கி.மீற்றராகும்.

இ. சாதாரண காற்று


★ மரம், செடி, கொடிகள் அசையும்.
★ புகை வேகமாகப் ப்க்கவாட்டிற்குச் செல்லும்.
★ கொடி விரிந்து பறக்கும்.
★ நீண்ட அலைகள் தோன்றும்.
★ காற்றின் வேகம் மணித்தியாலம் ஒன்றிற்கு 7-11 கிலோ மீற்றராகும்.

ஈ. நடுத்தர அளவிலான காற்று

★ மரங்களின் சிறு கிளைகள் அசையும்.
★ கொடி அசையும் ஒலி கேட்கும்.
★ கடலின் நடுவில் அலைகள் பிரிந்து வெள்ளை நிற நுரைகள் தோன்றும்.
★ புகை பரவிச் செல்லும்.
★ காற்றின் வேகம் மணியொன்றிற்கு 20-29 கிலோ மீற்றராகும்.

உ. புயற் காற்று

★ மரத்துடன் அசைவு ஏற்படும். தென்னை மரம் போன்றவை கீழ்நோக்கிச் சுழலும்.
★ கொடி வேகமாக அசையும்.
★ கடலின் நடுவில் அலை மலைபோல் மேலே எழும்பும்.
★ காற்றின் வேகம் மணித்தியாலம் ஒன்றிற்கு 51-61 கிலோ மீற்றராகும்.




## மழைமானி ஒன்று செய்தல்

தட்டையான அடியைக் கொண்ட பாத் திரம் அல்லது குவளை ஒன்றினை மரம்



செடிகள் இல்லாத இடத்தில் வைக்கவும். ஒரு பிரதேசத் தில் பெறப்படும் மழைவீழ்ச்சியை இந்தப் பாத்திரத்தில் சேரும் நீரின் அளவைக் கொண்டு கணக்கிடலாம். இதன் அளவு மில்லி மீற்றரிலேயே கணிக்கப்படுகின் றது. இதன்படி, மழை நாளொன்றில் குறிப்பிட்ட நேரத் தில் (காலை 8 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை) நீரின் மட்டத்தை அளவிடவும் அதனை அளவிட ப்ளாஸ்டிக் அல்லது உலோக அடிமட்டம் ஒன்றைப் பயன்படுத்தவும். நீர்த்துளியை அடியிலிருந்து அளக் கவும் இதன்மூலம் பெறப்பட்ட மழையின் அளவைக் கணிப்பிட முடியும்.

## உங்களுக்குத் தெரியுமா?

ஆரம்ப காலங்களில் கிராம மக்கள் அன்றாட வானிலை தொடர்பான தகவலைத் தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைக்கொண்டே கணிப்பிட்டனர். மிருகங்க ளின் செயற்பாடு, வானத்தின் தன்மை என்பனவற்றை அவர்கள் அவதானித்தனர். மழைவீழ்ச்சி அல்லது வானிலை தொடர்பாகக் கிராமவாசிகள் கூறியவை பின்வருமாறு....

## மழை தொடர்பாகக் கூறப்பட்டவை (மழை வருவதற்கான அறிகுறிகள்)

★ ஈசல்கள் பறப்பது.
★ தவளைகள், ஓணான்கள் ஒலி எழுப்புவது.
★ கறையான் தரையில் புற்றுக்கள் அமைப்பது.
★ அதிகளவில் வியர்ப்பது.
★ பருந்து கீழாகப் பறப்பது.

## வறண்ட வானிலை

★ இரவு நேரத்தில் வானம் தெளிவாக இருத்தல்.
★ பனி பெய்தல்.
★ வாகனங்களின் சத்தம் தெளிவாகக் கேட்டல்.

ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் சாரணர் உலகம்

## அணித் தலைவர்களுக்கொரு வேண்டுகோள்!



உங்களது அணியிலுள்ள ஒவ்வொரு சிறுவனையும் சிறப்பான முறையில் பயிற்றுவிப்பது சாத்தியமாகையால், அணித்தலைவர்களாகிய நீங்கள், உங்களது அணியில் உள்ள ஒவ்வொருவரையும் முழுப்பொறுப்பேற்று நீங்களாகவே சிறந்த முறையில் பயிற்றுவிக்க திடசங்கற்பம் பூணவேண்டும். திறமையுள்ளவர், திறமையற்றவர் என்று அவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்தாமல், அனைத்து சிறுவர்களையும் சரிசமமாகக் கையாளவேண்டும். அவரவர் திறமையை வெளிக்கொணர முயற்சிப்பது ஒவ்வொரு அணித் தலைவரதும் கடமையாகும். அந்தவகையில், அணித் தலைவர் ஒவ்வொருவரும் புத்திசாதுரியத்துடனும் மிகத் திறமையுடனும் சிறந்த சமயோசிதத்துடனும் நடந்துகொள்வீர்களானால், நீங்களே உங்களது அணியின் சாரணர்களுக்கு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்வீர்கள். உங்களை உதாரணமாக வைத்தே, ஒவ்வொரு சாரணியரும் தங்களது வெற்றிப்பாதையை சரியான முறையில் அமைத்துக்கொள்வர்.



எமது முத்தோரின் கட்டளைகளை நீங்கள் கீழ்ப்பணிவுடன் ஏற்று நடப்பீர்கள் என்பதை செயலிலும் காட்டவேண்டும். கலைச் சின்னங்களை நீங்களும் பெறுவீர்கள் என்பதை அனைவருக்கும் உணர்த்துங்கள். இதனையே உங்களது அணியின் சாரணர்களும் பின்பற்றுவர். நீங்கள் அவர்களுக்கு முன்மாதிரியாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் இருப்பீர்களேயன்றி, வலுக்கட்டாயப்படுத்துபவர் அல்ல என்பதை உங்களது ஞாபகத்தில் கொள்ளவேண்டும்.

## அணித் தலைவர்



ஒவ்வொரு அணியும் தமக்கென ஒருவரை தலைவராகத் தெரிந்தெடுக்க வேண்டும். அணித் தலைவரிடமிருந்து பெரும் சேவையை சாரணர்கள் எதிர்பார்க்கின்றனர். சாரணர்கள் தமது கடமையை திறம்படச் செய்வதற்கு அணித்தலைவர் பூரண சுதந்திரம் கொடுக்கிறார். அணித்தலைவர் தனக்கு உதவியாக தனது அணியிலுள்ள சாரணர் ஒருவரை தேர்ந்தெடுக்கலாம். இவ்வாறு தெரிவு செய்யப்படும் சாரணர் இரண்டாவது தலைவனாகின்றார். ஒவ்வொரு அணியினதும் திறமைக்கும் சுறுசுறுப்புக்கும் அணித்தலைவரே பொறுப்பாளராக இருப்பார். அணியிலிருக்கும் சாரணர்கள் தமது தலைவரின் கட்டளைகளுக்கு அச்சத்தினால் அன்றி, தமது அணியின் பெருமையைக் காப்பாற்றும் மூகமாக மனமுவந்து கீழ்ப்படிவர். அணித்தலைவர் தனக்குக் கீழ் உள்ள சாரணர்களை சிறந்த முறையில் வழிநடாத்திச் செல்வதனூடாக, பெரும் பொறுப்புக்களை வகிக்கப் பயிற்சி பெறுகின்றார். மேலும், தனக்கு கீழுள்ளவர்களை வழிநடத்துவதுடன், சாரணர் தலைவனும் அனைத்து துறைகளிலும் மிகுந்த திறமையாளனாக இருக்க வேண்டியது சாரணத் தலைவனுக்குரிய பண்பாகும். தான் எவ்வித பணிகளிலும் ஈடுபடாது, தனக்கு கீழுள்ளவருக்கு கட்டளை இடுவது ஓர் அணித் தலைவனுக்கு உகந்ததன்று.



ஒவ்வொரு துறையிலும் தலைமை தாங்கக்கூடியவாறும் பொறுப்புக்களை வகிக்கக்கூடியவருமான, நம்பகமுள்ள சிறந்த இளைஞரே, சமூகத்திற்குத் தேவைப்படுகின்றனர். அந்தவகையில், தனது அணியினை திறம்பட வழிநடத்திச் செல்லும் ஒவ்வொரு சாரணத் தலைவனுக்கும் வாழ்க்கையில் வெற்றிபெற நல்ல சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

## வவுனியாவில் நூற்றாண்டு விழா









சாரணத்தின் ஸ்தாபகர் பேடன் பவல் அவர்களின் 156 ஆவது நினைவு தினத்தையும் சாரணத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவையும்யொட்டி இரத்ததான நிகழ்வொன்றினையும் வவுனியா மாவட்டச் சாரணர்கள் அண்மையில் சிறப்பான முறையில் நடாத்தியிருந்தனர்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் வவுனியா மாவட்ட சாரணர்களின் உதவி மாவட்ட ஆணையாளர் யோகதாஸ் கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாரணர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

வவுனியா பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியினரால் இரத்தம் சேகரிக்கப்பட்ட அதேவேளை, சாரணர்களின் சைக்கிள் பவனியும் வவுனியா நகரில் இடம்பெற்றது. இந்த சைக்கிள் பவனியை சாரணர்களின் வவுனியா மாவட்ட ஆணையாளர் மயிலு சங்கரப்பிள்ளை பத்மநாதன் மற்றும் சாரணர் சங்கத்தின் செயலாளர் கணபதிப்பிள்ளை சுவாமிநாதபிள்ளை ராஜ்குமார் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

## சாரணர் அணிகள்

ஒவ்வொரு சாரணர் அணியும் ஆறு முதல் எட்டுச் சிறுவர்களைக்கொண்ட இரண்டு அல்லது பல அணிகளைக் கொண்டதாக இருக்கும். அணியிலுள்ள சிறுவர்களுக்கு பொறுப்புகளைக் கொடுத்து அவரவர் நற்குணங்களையும் திறமைகளையும் அவரவரே பெருக்கிக்கொள்ள இடமளிப்பதே அணி அமைத்தலின் சீரிய நோக்கமாகும். தனது அணிக்கு நல்லது செய்யவேண்டும், நற்பெயரைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனும் பெரும் பெறுப்பு தன்மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை உணர்ந்துகொள்ள ஒவ்வொரு சிறுவனுக்கும் இடமளிக்க வேண்டும். இவ்வாறான எண்ணம், ஒவ்வொரு அணியும் இணைந்து தமது அணிக்குரிய திட்டத்தினையும் கடமை மற்றும் பொறுப்புகளையும் நிறைவேற்ற உதவுகின்றது.



தயாரிப்பு:
**சாரணர் ஜெரம் டி சீல்வா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நேரத்தில் இரண்டு கைகளாலும் எழுதும் யுவதி!

ஒரே நேரத்தில் இரண்டு கைகளாலும் உங்களால் எழுத முடியுமா? முடியாதல்லவா? ஆனால், சீன நாட்டைச் சேர்ந்த யுவதி ஒருவர் இவ்வாறு எழுதி அனைவரையும் ஆச்சரியப்படுத்துகின்றார். அதுவும் எப்படித் தெரியுமா? ஒரு கையால் சீன மொழியிலும் மறு கையால் ஆங்கில மொழியிலும் எழுதியே இந்த ஆச்சரியத்தை அவர் நிகழ்த்துகின்றார்.



இந்த யுவதியின் பெயர் ச்சென் சியுஆன். இவர் ஒரு மொழிபெயர்ப்பாளராவார். 24 வயதாகின்ற இவர் ஒரே நேரத்தில் இரண்டு கைகளாலும் இருவேறு மொழிகளில் எழுதுவதை பார்ப்பதற்கென்றே பலரும் கூட்டம் கூட்டமாக வருகின்றனராம்.

இவருக்கு எவ்வாறு இந்த வல்லமை கிடைத்ததென்றால், பாடசாலையில் கற்கும்போது, ஆங்கிலப் பாடத்தையும் இவர் கற்றதால், சில சந்தர்ப்பங்களில் ஒரே நேரத்தில் இரண்டு பாடங்களதும் குறிப்புக்களை எழுத வேண்டியேற்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பங்களில் ஏதோ முயற்சித்துப் பார்ப்போமே என்ற எண்ணத்தில்தான் இரண்டு கைகளாலும் எழுதிப் பார்த்துள்ளார். என்ன அதிசயம் அவரால் இயல்பாக எவ்வித கோணலோ, பிழையோ இன்றி எழுத முடிந்துள்ளது. அப்போதுதான் தனக்குள் இத்தகைய சிறப்புத் திறமையொன்று மறைந்திருப்பதை அவர் உணர்ந்துகொண்டார்.

"நான் ஒருநாள் வகுப்பில் கற்றுக்கொண்டிருந்தபோது, விடுபட்ட ஆங்கிலப் பாடமொன்றை எழுதவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. அதன்போதுதான் மறுகையால் ஆங்கிலத்தை எழுதத் தொடங்கினேன். இரண்டு கைகளாலும் நான் எழுதுவதைக் கண்ட சக மாணவிகள் தாமும் இவ்வாறு எழுதிப் பார்க்க முயற்சித்தனர். ஆனால், அவர்களால் அது முடியவில்லை'' இவ்வாறு ச்சென் சியுஆன் தனது அனுபவத்தைக் கூறுகின்றார்.

இதனைத் தொடர்ந்து ச்சென் சியுஆன் தனது ஆங்கில பட்டப் படிப்பை வெற்றிகரமாக முடித்துக்கொண்டதுடன், தற்போது இவர் தனது திறமையை கவிதைகள் எழுதுவதிலும் பயன்படுத்துகின்றார். அதற்கமைய, ஒரே நேரத்தில் இரண்டு கைகளாலும் இருவேறு கவிதைகளை மிக லாவகமாக இவர் எழுதுகின்றார்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, மார்ச் மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday March 27, 2013.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org